T-UN-539

இறைவன் துணை.

# கிராமபூகோளம் முதலியன

1. கிராம பூகோளம்.
2. இந்திய பூகோளம்.
3. உலக பூகோளம்.
4. இந்தியா தேச சரித்திரம்.
5. இங்கிலாந்து தேச சரித்திரம்.

முதியோர் கிராமக் கல்வி—9.

கௌமார குருகுலம் மன்னார்குடி.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

# கௌமார குருகுலம், மன்னார்குடி.

## படிப்பவர்கள் கவனிக்க வேண்டியவை,

1 **படிப்பது எப்படி.** நாவல், கதைகள், மன உற்சாகத்திற்கும் காலட்போக்குக்கும் படிப்பது. கைத்தொழிலைப் பற்றிய நூல்கள், தேசசரித்திரம், பெரியோர் வாழ்க்கை சரித்திரம், முதலியன அறிவுவளர்ச்சிக்காகப் படிப்பது. இவைகளை ஒரு தரத்திற்கு இரண்டு தரம் கவனத்துடன் படிக்கவேண்டும். தேவாரம், திருவாய்மொழி, குறள், கீதை முதலிய நூல்கள் பக்தி, ஞானம், ஒழுக்கம் உண்டாவதற்குப் படிப்பது. அவைகளை பல முறை ஆழ்ந்து படிப்பதுடன் பாராயணமும் செய்யவேண்டியது.

2 **படித்து சீக்கிரம் திருப்பிக்கொடுக்கவும்.** புத்தகங்கள் படிப்பதற்காகவே உள்ளன என அறியவேண்டியது அவசியம். ஆதலால் படிக்காமல் நாம் வைத்திருந்தால் மற்றவர்கள் படிப்பதைத் தடைசெய்யும் பழிக்கு உள்ளாகிறோம்.

3 **படித்த புத்தகங்களைப்பற்றி நண்பர்களுக்குச் சொல்லவும்** இன்ன இன்ன புத்தகம் இருக்கிறது எனவும் அவைகளில் விசேஷங்கள் இன்னவை எனவும் மற்றவர்களுக்கும் தெரிவித்தால் அவர்களும் நம்மைப்போல் படித்து ஆனந்திப்பார்கள்.

4 **புத்தகங்களை நன்றாய்க் காப்பாற்றவும்.** படிக்கும்போது எண்ணை, ஈரம், அழுக்கு இல்லாத கையால் எடுத்துப் படிக்கவும்; சுத்தமான இடத்தில் வைக்கவும்; எடுகளை மடிக்காமல், கிழிக்காமல், எழுதாமல் காப்பாற்றவும். அடையாளம் வைக்கவேண்டுமானால் ஒரு காகிதம், நூல், ஓலையால் செய்க. வாங்கும்போது பார்த்து கெடுதல் இருந்தால் தெரிவித்து, வாங்கினவர்களிடம் திருப்பிக்கொடுக்கவேண்டியது முறை. கொடுக்கும்போது காண்பித்துக் கொடுக்கவும். புஸ்தகம் படித்தானவுடன் யாரிடம் வாங்கினீர்களோ அவர்களிடமே

திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். நீங்களே இன்னொருவருக்குக் கொடுக்கக்கூடாது. அன்றியும் புஸ்தகத்தை எந்தவூரில் கொடுக்கப்பட்டதோ அந்த ஊர் எல்லையைவிட்டு வெளியூருக்குக் கொண்டு போகக் கூடாது.

5 **படிப்பவர்கள் ஜாப்தாவில் பதிவு செய்யவும்.** ஒவ்வொரு புத்தகத்துடனும் ஒரு அச்சிட்ட ஜாப்தா கொடுக்கப்படுகிறது. அதில் படிப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஊர் பெயர் வாங்கி கொடுத்த தேதியை எழுதவும்.

6 **இனிவேண்டிய புத்தகத்தைத் தெரிவிக்கவும்.** படித்த புத்தகங்கள் போக இனி படிக்க ஆசைப்பட்ட புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம். கையில் இல்லாவிட்டால் கூடிய ஏற்பாடு செய்கிறோம்.

7 **படிக்கும் முறை.** எதிலும் உன் கண்களே உனக்கு முக்கியமானவை. உன் சுகத்திற்கும் துக்கத்திற்கும் அவைகளே காரணம். அவைகளை ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் நல்ல ஜலத்தால் நன்றாய் சுத்தம் செய்யவேண்டும். மங்கலான வெளிச்சத்தில் ஒரு போதும் வாசிக்காதே. வாசிக்கும் போது வெளிச்சம் தெளிவாயும் பிரகாசமாயும் இருக்கவேண்டும். வெளிச்சம் உன் பின்புறமிருந்தாவது இடதுபுறமிருந்தாவது புஸ்தகத்தில் விழட்டும். வாசிக்கும் போது சூரியகிரணங்கள் நேரில் புஸ்தகத்தில் விழக்கூடாது. உன் கண்பார்வையும் நேரில் ஷை வெளிச்சத்தில் விழக்கூடாது. வாசிக்கும் போது தலையை நிமிர்ந்து பார்த்து புஸ்தகத்தை உன் முகத்திலிருந்து 14 அங்குல தூரத்தில் பிடித்துப் படி. அப்படி படிக்கும் போது இடையிடையே புஸ்தகத்தைப் பார்ப்பதிலிருந்து கண்களுக்கு ஓய்வு கொடு.

கௌமாரகுருகுலம்
8—3—1934

**மா. இராமலிங்கம் பிள்ளை,**
காரியதரிசி.

T-UN-539

இறைவன் துணை.



# கிராமபூகோளம் முதலியன

1. கிராம பூகோளம்.
2. இந்திய பூகோளம்.
3. உலக பூகோளம்.
4. இந்தியா தேச சரித்திரம்.
5. இங்லொந்து தேச சரித்திரம்.

முதியோர் கிராமக் கல்வி—9.

கௌமார குருகுலம் மன்னார்குடி.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1,

தேச சரித்திரம் 5 (1)

# கிராம பூகோளம்.

ஆசிரியர் :—இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி.

கிராம பூகோள சாஸ்திரம் அறிவதற்கு உதாரணமாக பூவனூர் என்ற ஒரு கிராமத்தை எடுத்து அது சம்மந்தமான சில காரியங்களை ஆராய்வோம்.

## பூவனூர் கிராமம்.

1. இருக்குமிடம்.—மன்னார்குடிக்கு வடக்கு 7மைல் தூரத்திலும் நீடாமங்கலத்திற்குத் தெற்கே 2 மைல் தூரத்திலும், பாமணி ஆற்றிற்கு வலதுகரையில் பெரும்பாலுமாகவும் உள்ளது. கும்பகோணத்திலிருந்து மன்னார்குடிக்குப் போகும் கப்பிரோட்டில் 17-வது மைல்கல்லுக்கு சமீபத்தில் இருக்கிறது. பூவனூருக்கும் தெற்கே இராஜப்பையன் சாவடி இரயில்வே ஸ்டேஷன் ஒரு மைல் தூரம்.




2. விஸ்தீரணம்.—சர்க்கார் கிஸ்தி செலுத்தும் நஞ்சை நிலம் 982, புஞ்சை நிலம் 43, தீர்வையில்லாத இனம் 178, புரம்போக்கு

(ஆறு, குளம் முதலிய) 315, தரிசு 1 ஆக மொத்தம் 1519 ஏக்கர் விஸ்தீரணம். ஊர் நத்தம் 57½ ஏக்கர்.

3. ஜனக்கணக்கு முதலிய.—

| | | ஜனம் | | | மதத்தினர் | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம். | வீடுகள். | ஆண்- | பெண். | மொத்தம். | இந்து- | முஸ்லீம்- | கிறிஸ்து. |
| 1891 | 274 | — | — | 1299 | — | — | — |
| 1901 | 338 | 712 | 854 | 1566 | 1154 | 18 | 394 |
| 1911 | 347 | 689 | 887 | 1576 | 1131 | 32 | 413 |
| 1921 | 344 | 661 | 852 | 1513 | 1110 | 36 | 367 |
| 1931 | — | — | — | 1616 | — | — | — |

1931 வருஷத்திய ஜனக் கணக்கு இன்னும் வெளியாகவில்லை. ஆனால் மேலே சொல்லப்பட்ட எண் குறிப்பாக அறியப்பட்டது. 1891ஆ முதல் 1901ஆ வரை, ஜனங்கள் அதிகமாகி வந்தது. கூடியவரை கொஞ்சம் விருத்தியானது. 1911 வருஷத்திற்கு பிறகு குறைவாக காண்கிறது. இதைப்பற்றி யாவரும் விசாரிக்க வேண்டியது. வியாதிகளினால் ஜனச் சேதமானதா? வறுமையால் அல்லது வேறு காரணங்களால் அன்னிய ஊர்களுக்குக் குடியேறினார்களா? தீவாந்தரம் போய் செல்வம் சம்பாதிக்கிறார்களா? முதலிய கேள்விகள் கேட்டு, காரணம் அறிந்து, கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யவேண்டும்.

கால் நடைகள்.—

| வருஷம். | மாடுகள். | ஆடுகள். |
|---|---|---|
| 1891 | 821 | 265 |
| 1920 | 931 | 342 |
| 1924 | 948 | 567 |
| 1929 | 1044 | 402 |

பின் வருஷங்களின் கணக்கு கிடைக்கவில்லை. கிராமங்களில் கணக்கு பார்த்து மேலே ஜனத்தொகை விஷயம் சொன்னவிதமாக விசாரிக்கவேண்டியது.

வண்டி, உழவுகள் முதலிய.—1920ஆ த்தில், 85 வண்டிகள், 210 உழவுகள், 2 தரிகள், 2 கொல்லர், 2 ஆசாரி பட்டறைகள், 2 கடைகள் உள்ளன.

கோவில், குளங்கள்.—இரண்டு சிவன் கோயில்கள் அதில் ஒன்று பாடல்பெற்ற ஸ்தலம், ஒரு விஷ்ணு கோவிலும் இருக்கிறது; சிவன் கோவில் சாமுண்டி அம்மன் சந்நிதியில் ஞாயிற்றுக்கிழமை தோறும் விஷக்கடிக்கு வேர் கட்டுவார்கள். கிறிஸ்தவர்களுக்கு 3 மாதாக் கோவில்கள் உள்ளன. இவர்கள் பெரும்பாலும் பள்ளர்களும், பறையர்களும் இவர்கள் ரோமன் கதோலிக்கு வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

முஸ்லீம்களுக்கு ஒரு மசூதியும் கட்டப்பட்டிருக்கிறது. சிவன் கோவிலுக்கு 30 வேலி நிலமும், விஷ்ணு கோவிலுக்கு 2 வேலியும் இருக்கிறது. 4 குளங்கள் இருக்கின்றன.

குறிப்புகள்.—மாடு ஆடுகளுக்கு மேய்வதற்கு போதுமான இடம் இருக்கிறதா, மாடு ஆடு மனுஷர்களுக்குக் குடிக்க, குளிக்க ஜலம் போதுமானதா, என்றவைகள் விசாரிக்கவேண்டும். ஜலசௌகரியம் போதுமானதென்று காண்கிறது. ஆனால் அநேகமாய் எல்லாம் நஞ்சையாகவும், தரிசுகள் புஞ்சை நத்தம் முதலிய குறைவாகவும் இருக்கிறபடியால், நஞ்சைகள் சாகுபடி ஆனபிறகு ஆடு மாடுகளுக்கு மேய்ச்சலுக்கு புல் வெளி போதாதெனத் தோன்றுகிறது.

4. விளை பொருள்.—இது காவிரிப்பாய்ச்சலில் உள்ள ஒரு நஞ்சை கிராமம் ஆனதலால் நஞ்சைப் பொருளே அதிகம். புஞ்சை தானியங்களும் குறைவு.

ஏக்கர்கள்

| | 1893ஃலு | 1923ஃலு |
|---|---|---|
| நெல் | 1038 | 1010 |
| சோளம் | 7 | 2 |
| கேழ்வரகு | 6 | 3 |
| தினை | — | 1 |
| உளுந்து | — | 1 |
| வாழை | 1 | 1½ |
| பழச்செடி | 5 | 7 |
| நிலக்கடலை | 3 | — |
| காய்கறி | 5 | 4 |
| மற்றவை | — | 2½ |
| மொத்தம் ... | 1065 | 1032 |

கொல்லைத் தோட்டப் பயிர் செய்வதற்கு இன்னம் இடமுண்டு எனக் காண்கிறது. உணவுப்பொருள் தானியங்கள் தவிர ஆமணக்கு முதலிய மற்ற கொல்லைப் பயிர் செய்யக்கூடுமா எனவும் நெல் விலை குறைந்துபோனதால் கரும்பு முதலிய லாபகரமான மற்ற சாகுபடி எவ்வளவு தூரம் செய்ய முடியுமென ஆலோசிக்கவேண்டியது. அவ்விதம் பயிரை மாற்றி விவசாயம் செய்வது பூமி சாரத்தை விருத்தி செய்யும்.

5 மண்வகையும், தீர்வையும்.—

| | பிளானில் குறித்த ஸ்தலம் | மண்வகை | தீர்வை 1891ஃலு | பாசனம் |
|---|---|---|---|---|
| 1. | அ. | கரிசல் இருமண் | ரூ. 6-0 | பாமணியார் |
| 2. | ஆ. | கரிசல் களி | ரூ. 5-0 | கொண்டியார் |
| 3. | இ. | தாழ்ந்த கரிசல் இருமண் | ரூ. 5-0 | கொண்டியார் |
| 4. | ஈ. | தாழ்ந்த கரிசல் களி | ரூ. 4-8 | கொண்டியார் |

| பிளானில் குறித்த ஸ்தலம் | | மண்வகை | தீர்வை 1891ஹு | பாசனம் |
|---|---|---|---|---|
| 5. | உ. | நல்ல கரிசல் இருமண் | ரூ. 7-0 | கொண்டியார். |
| 6. | ஊ. | சாதாரண கரிசல் இருமண் | ரூ. 6-0 | கொண்டியார். |
| 7. | எ, | தாழ்ந்த கரிசல் இருமண் | ரூ. 5-0 | பாமணியார் |
| 8. | ஏ. | நல்ல கரிசல் களி | ரூ. 6-0 | கொண்டியார். |

குறிப்பு:—இந்த ஸ்தலங்களுக்கு அலாதி அலாதியாக இப்போதுள்ள சராசரித் தீர்வை தெரியவில்லை.

| தீர்வை | புஞ்சை தீர்வை 1 எக்கருக்கு | நஞ்சை |
|---|---|---|
| 1891ஹுக்கு முன் | ரூபா 1-1-10 முதல் | ரூபா 3-2-11 முதல் |
| | ,, 1-7-5 வரை | ,, 6-0-9 வரை |
| 1891ஹுல் | ,, 1-4-0 முதல் | ,, 4-8-0 முதல் |
| | ,, 2-8-0 வரை | ,, 7-0-0 வரை |
| 1920ஹுல் | ,, 1-8-0 முதல் | ,, 5-4-0 முதல் |
| | ,, 3-0-0 வரை | ,, 8-4-0 வரை |

முப்பது வருஷத்திற்கு ஒரு முறை அப்போது உள்ள கால ரீதி, தானியத்தின் விலை கூலி முதலியதுகளை முன்னிட்டு சர்க்கார் தீர்வையை முடிவு செய்வதற்கு செட்டில்மேன்ட் எனப் பெயர். அவ்விதமாகச் செட்டில்மென்ட்டு நடந்தவைகளில் ஏற்பட்ட தீர்வை மேலே காட்டப்பட்டுள்ளன. அன்றியும் தீர்வை பூமி மண்ராசி, பாசனம், வடி கால் முதலியவைகளைப் பொறுத்தும் ஏற்படும்.

6. குடித்தனக்காரர் இயல்பு என்பது குடித்தனக்காரருக்கு உள்ள பூமியையும், அதனல் சர்க்காருக்கு அவர்கள் தீர்வையைக் கொண்டும் ஒருவாறு அறியலாம்.

| தீர்வை ரூபாய் | | தீர்வை கொடுக்கும் குடித்தனக்காரர்கள் | அவர்களுக்குள்ள பூமி ஏக்கர் | ஆள் 1க்கு வீதம் ஏக்கர் |
|---|---|---|---|---|
| 0— 1 | க்கு குறைவு | 59 | 9 | 0·15 |
| 1— 10 | ,, | 61 | 53 | 0·88 |
| 10— 30 | ,, | 61 | 167 | 2·74 |
| 30— 50 | ,, | 15 | 92 | 6·13 |
| 50— 100 | ,, | 16 | 168 | 10·50 |
| 100— 250 | ,, | 13 | 284 | 21·76 |
| 250— 500 | ,, | 3 | 134 | 44·67 |
| 500—1000 | ,, | 1 | 117 | 117·00 |
| | மொத்தம்... | 229 | 1025 | 4·48 |

இங்கு குடித்தனக்காரர்கள் என்றவர்கள் பட்டாதாரர்கள். ஆதலால் மொத்தம் பூவனூரில் 229 பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். ஒரு பட்டாதாரரும் ஒரு குடும்பம் எனக் கொள்ளலாம். ஒரு குடும்பத்தில் 1 புருஷன் 1 பெண்சாதி 2, 3 பேர் வயது சென்ற

வர்கள், பிள்ளை பெண்கள் இருக்கும். ஒரு குடும்பத்திற்கு சராசரி 4, 5 பேர்களாகும். இவ்விதமாக 229 பட்டாக்களுக்கும், 1000 பேர் ஆண் பெண் பூமியுள்ள குடும்பத்தினர் ஆவர். மொத்தம் 1513 பேர் ஜனத்தொகை ஆனபடியால் வேறே தொழிலும் இல்லாததால் மேற்சொல்லிய 1000 பேர் போக பாக்கி 500 பேர் சுமார் கூலிக்காரர்கள் ஆவர்.

சாதாரணமாக ஒரு குடும்பத்திற்கு சௌகரியமாக இருக்க 5 ஏக்கர் வேண்டுமென்று வைத்துக்கொண்டால், 48 குடும்பங்கள் சௌகரியமாக இருக்கலாம், மிகுந்த (229-48) 181 குடும்பங்களுக்கு சௌகரியம் குறைவாகும். இதிலும் 61 போக பாக்கி 120 குடும்பங்களுக்கு 1 ஏக்கராவுக்கும் குறைவாக இருக்கிறபடியால் கஷ்டமதிகம் எனச் சொல்லவேண்டியதில்லை. இவர்கள் வேறு கைத்தொழில் செய்து தங்கள் செலவுகளுக்குத் தக்கவருவாய் அதிகம் செய்யாவிட்டால் கடன் வாங்கிப் பிழைத்து உள்ள நிலமும் விற்றுவிடத்தான் வேண்டிவரும். ஒரு குடும்பத்தில் சம்பாத்தியம் செய்யக்கூடியவர்கள் பயிரிடுவது தவிற மற்ற தொழில்களையும் செய்யவேண்டும்.

7. மழை சீதோஷ்ணம் முதலியவைகளை, மன்னார்குடியைப் பற்றி உள்ள விபரங்கள் மழை காற்று சீதோஷ்ணம் என்ற பகுதியில் உள்ளவைகளைக்கொண்டறிக.

கிராம பரிபாலனம் வழக்கம் போல் கிராம முனிசீபும் கணக்கரும் கிரிமினல், சிவில், ரெவனியூ விஷயங்களை விசாரித்து வருகின்றனர். கோவாபரேடிங், பஞ்சாயித்து சங்கங்களும் இருக்கின்றன. சிவன்கோவிலை தேவஸ்தான கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட டிரஸ்டிகள் கவனித்து வருகிறார்கள். ஜனங்கள் சாமான்னியமாய் மன்னார்குடிக்கு வந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை கடைகளிலும் சந்தையிலும் வாங்கிக் கொள்ளுகிறார்கள். தாலுக்கா போர்ட்டு பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அதில் 40 பிரதம பிள்ளைகள் படிக்கிறார்கள். பறையர் பள்ளர்கள் இதில் படிக்கவில்லை அவர்களுக்கு பள்ளிக்கூடமும் வேறு இல்லை அவர்களுக்கு வேண்டிய கல்வி உதவி போர்டார்களாவது, ஊராராவது, பாதிரிமார்களாவது செய்யவேண்டும்.

முடிவுரை :—ஒவ்வொரு கிராமவாசியும் தான் இருந்துவரும் கிராமவிஷயங்களை மேல் சொல்லிய வகையிலும் இன்னம் மற்ற வகையிலும் விசாரித்து அறியவேண்டும், தற்கால முறையில் கல்வி கற்றவர்களுக்கு உலக சமாசாரம், தேச சமாசாரம் பல தெரியும் ஆனால் தங்கள் கிராமவிஷயங்கள் மாத்திரம் தெரியாது. இதைப் போன்ற பேதமை உலகில் வேறெங்கும் இல்லை. கிராம சம்பந்தமான எல்லா விஷயங்களையும் அறிந்து ஆலோசித்தால் அல்லாமல் கிராம முன்னேற்றம் முடியாது. கிராமவாஸிபர்கள் இவைகளைக் கவனிப்பார்களாக !

இறைவன் துணை.



# கிராம பூகோளமும், அறிவும்.

ஆசிரியர்:— என். கோபால ஐயர், பி. ஏ., எல். டி.,
ஆசிரியர், தேசீய உயர்தரப் பள்ளிக்கூடம், மன்னார்குடி.

குருகுலம்

1. பூகோள சாஸ்திரம் என்றால் என்ன?

பூமி, ஆகாயம், சமுத்திரம், இவைகள் சம்பந்தமான விஷயங்கள். பழயபூகோள சாஸ்திரத்தில் மேற்குறித்தவைகளின் அமைப்புகளைப் பற்றித் தனித்தனியே அறிதல்; புதிய பூகோளத்தில் அவைகளின் சம்பந்தா சம்பந்தங்களையும், மனித வாழ்க்கைக்கு அவைகள் எவ்விதம் ஈடுபட்டிருக்கின்றன என்றும் நாம் கற்றுணர்கிறோம். பூமியின் வளருந்தன்மையையும் அதன் அம்சங்களின் மாறுதல்களையும் மனிதனது வாழ்க்கை அவைகளுக்கு எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டும் பாதிக்கப்படாமலுமிருக்கிறதென்றும் நாம் அறிகிறோம்?

2. மனிதவாழ்க்கைக்குப் பூகோளசாஸ்திரம் இன்றியமையாதது. இதன்பொருட்டே மற்ற சாஸ்திரங்களைவிட பூகோள சாஸ்திரம் மாணவர்களுக்கு அவசியமானது. பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் இதன் தன்மை, மற்ற சாஸ்திரங்களிலுள்ள சாராம்சங்களைக் கிரகித்து அவைகளைக்கொண்டு தனக்கு வேண்டியவைகளையறிதல்.

3. பூகோளசாஸ்திரத்தை எவ்விதமாகக்கற்றுணர்கிறோம்?

(1) அநுபவப் பூர்வமாகவும்,

(2) உருவப்படங்கள், போட்டோப் படங்கள், மாடல்கள், அட்டவணைகள், வளைந்தகோடுகள் முதலிய சாதனங்களால்,

(3) முன்னோர்கள் உலகப்பிரயாணங்களில் கண்டறிந்திருக்கும் விஷயங்களை விஷயபூர்வமாகவும், கதாப்பூர்வமாகவும் அறிகிறோம்.

4. ஒவ்வொரு மாணுக்கரும் பூகோளசாஸ்திரத்தை அநுபவப்பூர்வமாக ஆரம்பிக்கவேண்டும். இதற்கு முக்கிய சாதனம் கிராம பூகோளம் அதாவது தான்வசிக்கும் கிராமமோ அல்லது பட்டணமோ அதில் உள்ள பூகோளசாஸ்திர அம்சங்கள்.

கிராம பூகோளசாஸ்திரத்திலிருந்து, ஜில்லா, இராஜ தானி, தேசம், உலகம், முதலிய பூகோளசாஸ்திர ஆராய்ச்சிக்குச் செல்லுதல்.

5. கிராமத்தில் ஒவ்வொரு மாணுக்கனும் பூகோள சாஸ்திர சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) கிராமத்தின் அமைப்பு, எல்லைகள், திக்குகள்.
(2) ,, சீதோஷ்ணம்
(3) ,, மழை.
(4) ,, விளைபொருள்கள்.
(5) ,, கைத்தொழில்கள்.

மேற்குறித்த அம்சங்களை மிகுந்த எளிய வழியில் கற்கஆரம்பிக்கும் முறைகள் பின்வருமாறு:—

(1) கிராமப்பள்ளிக்கூடத்தின் அமைப்பு, விஸ்தீரணம். இவைகளைக்குறிக்கும் படங்களை எழுதுதல்.

(2—3) i மழைகாலம், கோடைகாலம் இவைகளில் சூரியனது தோற்றமும் சலனமும், இந்த சமயங்களில் காற்று எப்படி அடிக்கிறது.

ii சூரியன் உதயம், அஸ்தமனம், ஒவ்வொரு நாளும் குறித்தகாலத்தில் சூரியனது இருப்பிடத்தையும் சலனத்தையும் கவனித்துப்பார்ப்பது. முறை— வீட்டின் தாழ்வாரங்களில் கோல்நட்டு அதன் நிழலின் மாறுதல்களை ஒவ்வொரு நாளும் குறித்துக்கொள்வது.

iii வாயுமானம் அறியும் கருவி (பாராமிட்டர்), சீதோஷ்ணம் அறியும் கருவி (தர்மாமிட்டர்), இவைகளின் பிரயோஜனம், உபயோகிக்கும் விதம் அறிதல்.

(4—5) மாணுக்கர்களை உபாத்தியாயர் கிராமத்து விளை பொருள்களையும், கைத்தொழில்களையும் கண்ணுல் நேரில் பர்ப்பதற்குப் பல பிரிவு(பார்டி)களாக அழைத்துச் செல்வது.

பிரிவுகூட்டத்தார் முக்கியமாக கவனிக்கவேண்டிய அம்சங்கள்:—

(அ) சுற்றிப்பார்க்கப்போகுபவர்கள் (எக்ஸ்கர்ஷன்) விளையாட்டாக சிற்றுண்டி சாப்பிடப்போகிறவர்கள் (பிக்னிக்) அல்ல. பூகோள சாஸ்திர ஆராய்ச்சிக்கு அடிப்படையாகவுள்ளது.

(ஆ) ஆகையால் மாணவர்கள் சுற்றிப்பார்க்க கிளம்புவதற்கு முன் எங்கெந்த விடங்களுக்கு போகப்போகிறுர்களென்றும்,

என்ன யென்ன விஷயங்களை ஆராய்ச்சி செய்யப்போகிறார்கள் என்றும் முன்னரே தெரிந்துகொள்ளவேண்டும். ஆராய்ச்சி செய்தபிறகு வகுப்புகளில் கலந்து பேசிக்கொண்டு தாங்கள் பார்த்த விஷயங்களை மனதில் ஸ்திரப்படுத்திக்கொள்ளவேண்டும்.

(இ) பிரிவுகூட்டத்தார் (பார்டி) செல்லுகையில் சிறுவர்கள் பார்க்கக்கூடிய விஷயங்கள்:—

(1) கிராமத்தின் மேடு பள்ளங்கள் மண்ணின் குணங்கள் அவைகளில் வளரும் மரம் செடிகள்.

(2) நதி (அல்லது ஓடை:-) அதில் நின்று ஓடும் கிளைகள்; நதியால் ஏற்படும் நில மாறுபாடுகள்.

(3) கிராம சந்தை (மார்க்கெட்.)

(4) வண்டிகள் செல்லும் பாதைகள்.

(5) கிராமகொல்லன், கன்னான், தட்டான் பட்டரைகள்.

மேற் குறித்தவைகளிலிருந்து வாலிபர்கள் கிராமத்தின் பரப்பு, எல்லை, சாகுபடி, வியாபாரம், தொழில் முதலியவைகளை எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

கிராமத்திலிருந்து ஜில்லா, இராஜதானி, தேசம், கண்டம் முதலானவைகளின் பூகோள சாஸ்திரங்களுக்கு மெதுவாக ஆராய்ச்சி செய்யப்போகலாம்.

6. உலக பூகோள சாஸ்திரத்தில் நாம் பெரும்படியாகத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் யாவை?

உலக சம்பந்தமான சில பொது விஷயங்கள்:—

(1) சூரியனது வெளித்தோற்றமான சலனம்:- இதை (அடல்ட்)வளர்ந்த பிள்ளைகளுக்கு இயற்கை மூலமாக கற்பித்தல்.

(2) பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ளல். உதாரணம்—பம்பரம். இரவு பகலுக்குக் காரணம்—படம் விளக்கும் பம்பரமும் கொண்டு காண்க

(3) பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றுதல்—காலங்கள் மாறுபடுதல்.

படம்:— சூரியன் மத்தியில் அதைச்சுற்றி பூமியும் அதன் இடமாறுதல்களும்.

(4) உஷ்ணத்திற்கு ஏற்றால்போல் (உஷண மண்டலங்கள்) பூமியின் பிரிவினை குளோபின் உருவத்தால் உஷ்ணமண்டலங்களைக் காண்பித்தல்.

சூரியனது நேரான கிரணங்களும் சாய்ந்த கிரணங்களும்.

(5) தாவரப்பொருள்களுக்குத் தகுந்தாற்போல் பூமியின் பிரிவினை. இவ்விடத்தில் உஷ்ணத்தின் தன்மைக்குத் தகுந்தாற்போல் பயிர்பச்சையென்பதை அறிதல். தாவரமண்டலங்களைப் படங்கள், போட்டோக்கள் மூலமாகத்தெரிந்துகொள்ளலாம்.

(6) மனிதர்களுக்குத் தகுந்தாற்போல் உலகப்பிரிவினை. கருப்புமனிதர்கள், (நீக்ரோக்கள்.) பழுப்புநிறமான மனிதர்கள் வெள்ளையர்கள்.

(7) காற்று மழை இவைகளுக்குத் தகுந்தாற்போல் பூமியின் பிரிவினை.

(1) உலகக்காற்றுகள்.

(2) ஜாஸ்தி மழைபெய்யும் இடங்கள்.

(3) வனாந்திரங்கள்.

(4) பருவக் கரற்றுகளினால் மழை பெய்யக்கூடிய இடங்கள்.

(அ) வியாபாரக்காற்றுகள் வீசும் பிரதேசங்கள்.

(ஆ) எதிர் வியாபாரக்காற்றுகள் வீசும் பிரதேசங்கள்.

(இ) பருவக்காற்றுகள் வீசும் பிரதேசங்கள்.

8. பூமியைப் பெரும்பகுப்பான இயற்கைப் பிரதேசங்களாகப் பிரித்தல். பிறகு ஒவ்வொரு பிரதேசத்தின் அம்சங்களைக் கற்றுணர்தல் இப்படிச் செய்வதால் விஷயங்கள் மனதில் தெளிவுறப் படிதல்.

(9) பொதுவான உலகசம்பந்தமான பூகோளசாஸ்திர விஷயங்களைக் கிராம பூகோளத்திலிருந்து படிப்படியாக உலக பூகோளத்திற்குச்செல்வது.

மழைக்காற்று சீதோஷ்ணம் முதலியவை வேறு அலாதி பிரிவாகவும், சூரியனைச்சுற்றி பூமி செல்லுதல் முதலியதைப் பற்றி பஞ்சாங்கம், வானசாஸ்திரம் என்ற பிரிவுகளாகவும். பூதபௌதிகம் என்ற பிரிவில்பார்க்க.

---

பாரதி பிரஸ், மன்னார்குடி.



இந்தியா தேசம்.
திபெத்து
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இந்து மஹா சமுத்திரம்
பூடான்
லாஸா
காபூல்
கராச்சி
பலுசிஸ்தானம்
ராஜபுதனம்
கல்கத்தா
பம்பாய்
கோவா
மதராஸ்
புதுச்சேரி
மதுரை
கொழும்பு
இலங்கை
நாகபுரி
பஸ்டார்
மாளய தீவுகள்

இறைவன் துணை.

கௌமார துநதலக்
கல்விப் பிரசுரம் 1.

தேச சரித்திரம் 8.

# இந்திய பூகோளம்.

ஆசிரியர் :—ஜே. அமலதாஸ், பி.எ., எல்.டி.,
உபாத்தியாயர், பின்ட்லே காலேஜ், மன்னார்குடி.

நமது தேசத்தின் பெயர் இந்தியா. இது உலகத்தின் முக்கியமான தேசங்களில் ஒன்று. இது ஒரு தீபகற்பம். (மூன்று புறம் நிலத்தால் சூழப்பட்டு, ஒருபுறம் ஜலத்தால் சூழப்பட்ட பூபாகத்திற்கு தீபகற்பம் என்று பெயர்) இது ஆங்கிலேயர் தேசமாகிய கிரேட் பிரிட்டெனைவிட இருபது மடங்கு பெரியது. இதின் விஸ்தீரணம் 18,00,000 சதுரமைல்; இது பிரிட்டிஷ் ராஜ்ஜியங்களில் ஆறில் ஒருபங்கு; வடக்கே காஷ்மீரத்திலிருந்து, தெற்கே கன்னியா குமாரிமுனை வரைக்கும் 2022 மைல்; மேற்கே பலுசிஸ்டானிலிருந்து, கிழக்கே பர்மா மட்டும் 2520 மைல்.

அமைந்திருக்கும் இடம்.—குண (கிழக்கு) கோளத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இந்து சமுத்திரத்தின் தலைபாகத்தில் இருக்கிறது.

எல்லைகள்.—வடக்கில் ஹிமாலயமலைகள், தெற்கில் இந்து மஹா சமுத்திரம், மேற்கில் அரபிக்கடல், வடமேற்கில் ஆப்கானிஸ்தானம், கிழக்கில் வங்காள விரிகுடா, வடகிழக்கில் சீனதேசம்.

**கடற்கரை.**—ஜலபாகம் அதிகமாக நிலத்தினுள் ஊடுருவிச் செல்லவில்லை. கடற்கரை நேராக இருக்கிறது. மேலும் கடற்கரை மணற்பாங்காகவும், அலைகளால் மோதப்படுகிறதாகவும், கரைக்கருகில் ஆழமில்லாமலுமிருக்கிறது. கடற்கரை இப்படி இருப்பதினால் உண்டான அசௌகரியங்கள் என்னவென்றால் (1) சீதோஷ்ணஸ்திதியின் சமதன்மை குறைவாயிருக்கிறது. (2) கப்பல் தங்குவதற்கு வசதியான இடங்கள் அநேகமாயில்லை, மேற்குக் கரையில், பம்பாய் இயற்கையாகஅமைக்கப்பட்ட ஒரு துறைமுகம். கிழக்குக்கரையிலுள்ள சென்னையில் கோடானகோடி ரூபாய் செலவழித்து துறைமுகம் கட்டியிருக்கின்றனர்.

தீவுகள்.—இந்தியாவுக்குத் தெற்கில் இலங்கையும், அரபிக் கடலில் இலக்ஷத்தீவுகளும், மாளயத்தீவுகளும், வங்காள விரிகுடாவில் அந்தமான், நிக்கோபர் தீவுகளும் இருக்கின்றன.

## இயற்கை அமைப்பு.[1]

வடக்கில் ஹிமாலயத் தொடர்கள் பார்மீ பீட பூமியிலிருந்து தென் கிழக்காக சுமார் 1500 மைலுக்கு வியாபித்திருக்கிறது. இங்கே ஒன்றின்பின் ஒன்ருய் மூன்று தொடர்கள் இருக்கின்றன. இந்த ஹிமாலய மலைப்பிரதேசம் தெற்கு வடக்காய் சுமார் 150 மைல் இருக்கிறது. இங்குள்ள சிகரங்களில் பல சமுத்திரமட்டத்திற்கு 4½ மைல் உயரத்திற்கு மேற்பட்டவை. அச்சிகரங்களில் முக்கியமானவை எவரஸ்ட்டு (29,000 அடி) கஞ்சன்கங்கா, தவளகிரி, நந்ததேவி, நங்கபர்வதம் முதலியன. ஹிமாலய பர்வதம் மிகவும் உயரமானதாகையால் எப்போதும் உரைபனியால் மூடப்பட்டிருக்கிறது. ஹிமாலயம் என்பதற்கு பனி இருப்பிடம் என்று அருத்தம்.

இப்பர்வதத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ளவர்கள் போக்கு வரவு வைத்துக்கொள்வது அசாத்தியம்; ஆனல் டார்ஜிலிங், சிம்லா இவைகளின் சமீபத்திலுள்ள தாழ்வான இடங்களின் வழியாய் தீபத்து தேசத்துடன் வியாபாரப் போக்கு இருக்கிறது.

ஹிமாலயத்தால் நம்தேசத்திற்கு நன்மைகள் சில உண்டு; வடக்கிலிருந்து யாவரும் படையெடுத்து வரமுடியாது. வடக்கே உத்திரதுருவத்திலிருந்து வரும் குளிர்காற்றைத் தடுக்குகிறது. மேலும், ஹிமாலயத்தில் உற்பத்தியாகும் நதிகளுக்கு அது எப்போதும் ஜலம் தருகிறது. மழைகாலத்தில் மழை ஜலம் ஆற்றில் ஓடும்; கோடைகாலத்தில் பனிக்கட்டி உருகி ஜலமாக ஆற்றில் வரும்.

2. வடமேற்கு மலைகள்.—ஹிந்துகுஷ், சூலைமான்; இம்மலைகளின் உயரம் குறைவாகையால் இங்கே சிலகணவாய்கள் காணப்படுகின்றன. இவைகளில் முக்கியமானவை கைபர்பாஸ், போலன் பாஸ். இவைகளின் வழியாய் நம்தேசத்திற்குள் முற்காலத்தில் படையெடுத்து வந்தனர் பலர்.

3. வடகிழக்கு மலைகள்.—ஹிமாலயத்தின் கிழக்கிலிருந்து அநேகம் தொடர்கள் தெற்கு வடக்காய் வியாபித்திருக்கின்றன. இத்தொடர்களின் இடையில் நீண்டு குறுகிய பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. இவைகளின் நீண்டதும், வடக்கிலிருந்து தெற்கே ஓடுகிறதுமான பலநதிகள் காணப்படுகின்றன.

4. சமவெளி.—மேற்சொல்லப்பட்ட வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு மலைகளுக்கிடையில் ஒரு பெரிய சமவெளி அமைக்கப்பட்டுள்ளது ஹிமாலயத்தில் உற்பத்தியாகிற பல நதிகள் இச்சம

[1] குறிப்பு:—இப்புத்தகத்தில் மழை, காற்று, சீதோஷ்ணம் என்ற பாகத்தில் 3-வது பக்கத்திலுள்ள இரண்டு படங்களையும் இத்துடன் உள்ள படத்தையும் கவனிக்கவும்.

வெளியில் பாய்கின்றன. சிந்தும், கங்கையும் இங்கே முக்கிய நதிகளாகையால் இதற்கு சிந்து கங்கா சமவெளி யென்று பெயர்.

5. தக்ஷிண (தக்காண்) பீடபூமி.—இதின் உயரம் சுமார் 2000 அடி மேற்கிலிருந்து தென்கிழக்காய் சரிந்திருக்கிறது. இது முக்கோண வடிவமுள்ளதாயிருக்கிறது. இப் பீடபூமியின் மூன்று பக்கங்களிலும் மலைத்தொடர் விளிம்புகள் காணப்படுகின்றன. இந்தியாவின் மத்தியபாகத்தில் ஒன்றின்கீழ் ஒன்றாக விந்தியமலை, சாத்பூராமலை என்ற மலைகள் வியாபித்திருக்கின்றன. விந்தியமலை இந்தியாவை இரண்டு பிரிவாகப் பிரிக்கும் ஒரு இயற்கை எல்லையாக இருகிறது. இதற்கு வடக்கிலுள்ளதை வட இந்தியா என்றும் தெற்கிலிருப்பதை தக்ஷணம் என்றும் கூறுகிறார்கள்.

6. அரவல்லிமலை.—இது விந்தியமலையின் மேற்குக்கோடியிலிருந்து வடகிழக்காக வியாபித்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாகவே ஒரு மேட்டு நிலம் டில்லிவழியாக சிம்லா மட்டும் செல்லுகிறது. இது கங்கா, சிந்து நதிகளின் நீரைப் பிரிக்கும் மேடு, கங்கை சமவெளியையும், சிந்து சமவெளியையும் வேறுபடுத்தும் எல்லையாகவும் இருக்கிறது.

7. மத்திய இந்தியா பீடபூமி.—விந்திய மலையின் மேற்கு பாகத்தில், மாளவா என்ற பீடபூமியிருக்கிறது. இப்பீடபூமியும், இதற்கருகாமையிலுள்ள மற்ற பீடபூமி பிரதேசங்களும் மத்திய இந்தியா பீடபூமி யென பெயர் வழங்குகின்றன. இப்பீடபூமி வடகிழக்காய் சரிவுற்றிருக்கிறது.

8. மேற்கு மலைத்தொடர்.—(4000 அடி) இது அரபிக்கடல் ஓரமாக, சாத்பூரமலையின் மேற்கு முனையிலிருந்து தெற்கு வடக்காக வியாபித்திருக்கிறது. பம்பாயிக்கு அருகில் மலை தாழ்வாக இருப்பதினால், அங்கே சில கணவாய்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பம்பாய்க்கு வடகிழக்கிலுள்ளதற்கு தால்காட் என்றும் தென்கிழக்கிலுள்ளதற்கு போர்காட் என்றும் பெயர். இவைகள் இருப்புப்பாதை செல்லும் மார்க்கங்களாயிருக்கின்றன. இம்மலைத் தொடர், உள்நாட்டார் மேற்கு சமுத்திரக் கரையுடன் வரவு வைத்துக்கொள்ள கொஞ்சம் இடையூறாயிருக்கிறது.

9. கிழக்கு மலைத்தொடர்.—இது மேற்கு மலைத்தொடரைவிட உயரம் குறைவு. சமுத்திரத்திற்கு சமீபமாயுமில்லை. இது ஒரே தொடர்ச்சியாயிராமல், பல இடங்களில் தாழ்ந்தும் பிளவுபட்டுமிருக்கிறது இப்பிளவுகள் பல நதிகள் பாயும் வழியாயிருக்கின்றன.

10. நீலகிரிக்குன்று.—மேற்கு மலைத்தொடரும், கிழக்கு மலைத்தொடரும் ஒன்றாய்க்கலந்து தெற்கில் முடியுமிடத்திற்கு நீலகிரிக்குன்று என்று பெயர். இங்கே தொட்டபெட்டா என்றமலைச் சிகரம் ஒன்றுண்டு.

11. ஆனைமலை.—நீலகிரிக்குத் தெற்கில் பாலக்காட்டு கணவாய் இருக்கிறது. கோயமுத்தூர் கணவாய் என்றும் அதை அழைப்பார்கள்; இதின் நீளம் சுமார் 20 மைல். இக்கணவாய் வழியாக சென்னையிலிருந்து மேற்குக்கரைக்கு ஒரு இருப்புப் பாதை செல்லுகிறது. இக்கணவாய்க்குத் தெற்கில் ஆனைமலைக் குன்றுகள் இருக்கின்றன. இவற்றிலுள்ள ஆனைமுடி என்னும் சிகரம் தக்ஷிணத்திலுள்ள சிகரங்களில் உயரமானது. இந்த ஆனைமலை, ஏலக்காய் மலை என்ற பெயருடன் கன்னியாகுமாரி வரைக்கும் வியாபித்திருக்கிறது.

12. சமவெளிகள்.—அரபிக்கடலுக்கும், மேற்கு மலைத் தொடருக்கும் நடுவில் ஒரு சமவெளியிருக்கிறது. அப்படியே, கிழக்கு மலைத்தொடருக்கும் வங்காள விரிகுடாவுக்கு மிடையில் ஒரு சமவெளியிருக்கிறது. கிழக்குக்கரை சமவெளி மேற்குக் கரை சமவெளியை விட அகலமாயிருக்கிறது.

ஆக இந்தியாவின் முக்கிய இயற்கைப் பிரிவுகள் என்னவென்றால் (1) ஹிமாலயப்பிரதேசம், (2) சிந்து சமவெளி, (3) கங்கா சமவெளி, (4) மத்திய இந்தியா பீடபூமி, (5) தக்ஷிணபீடபூமி, (6) கிழக்குக்கரை சமவெளி, (7) மேற்குக் கரை சமவெளி. சீதோஷ்ணஸ்திதி காற்று, மழை இவைகளைப்பற்றி பிரத்தியேகமா மழை காற்று சீதோஷ்ணம் என்ற பகுதியில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

## இந்தியாவின் நதிகள்.

வட இந்தியாவில் பாய்வன.

1. சிந்து நதி.—இதற்கு ஜீலம், சீனுப், ரவி, பியாஸ், சட்லஜ் என்னும் ஐந்து உபநதிகள் இருக்கின்றன. ஐந்து நதிகள் பாய்கிற இந்த இடத்திற்கு பாஞ்சாப் என்று பெயர் இடப்பட்டிருக்கிறது. இங்கே 20 அங்குலத்துக்கு மேற்பட்ட மழைகிடையாதாகையால், இந்த நதிகளின் ஜலத்தைக் கொண்டே சாகுபடி செய்ய வேண்டியதிருக்கிறது இவ்விடத்தில் அநேக கால்வாய்கள் வெட்டி நீர் பாய்ச்சுவதற்கான அனுகூலங்கள் செய்திருக்கின்றனர்.

2. காங்கா நதி.—இது மலைப்பிரதேசத்தை விட்டு சமவெளியில் இறங்கும் இடத்தில் அரித்துவாரம் என்னும் ஊர் உண்டு. இது இந்துக்களுக்கு ஒரு புண்ணிய ஸ்தலம். இதற்கு கோமதி, கோக்ரா, கண்டகி, யமுனு, சம்பல் என்ற உபநதிகள் இருக்கின்றன. இந்நதியின் கரைகளில் பெரிய பட்டணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று காசி கங்கா சமவெளி வண்டல் பூமியாகையால் இது அதிக செழிப்புள்ள பிரதேசம். இங்கே ஜனநெருக்கமும் ஜாஸ்தி.

3. பிரம்மபுத்திரா நதி.—இது உற்பத்தியானது முதல் 800 மைல் தூரம் மலைப்பிரதேசத்திலேயே ஓடுகிறது. ஆகையால் மற்ற இரண்டு நதிகளைப்போல் இது அவ்வளவு பிரயோஜன மானதல்ல. இது சமவெளியில் இறங்கும்போது கங்கா நதியுடன் கலந்து கொள்ளுகிறது. இவ்விரண்டு நதிகளாலுண்டாகிற டெல்டாக்கள் மிகவும் விசாலமானவை. இது வெகு செழிப்பான பிரதேசம் ஆனால் பாறைகளுக்கருகில் காடுகளும் புதர்களும் அடர்ந்திருக்கின்றன. இவை புலிகளுக்கும் முதலைகளுக்கும் இருப்பிடம். இந்த இடத்துக்கு பெயர் சுந்தர்பன்ஸ்.

## தக்ஷிணத்தில் பாயும் நதிகள்.

1. நர்மதை.—விந்தியமலைகளில் உற்பத்தியாகி, விந்தியா சாத்பூரா மலைகளுக்கிடையே ஓடி, காம்பே வளைகுடாவில் விழுகிறது.

2. தப்தி.—இது சாத்பூரா மலைக்குத் தெற்கில் மேற்கு முகமாய் ஓடி காம்பே குடாவில் விழுகிறது.

3. மகா நதி.—இது கிழக்கு மலைத் தொடரைச் சேர்ந்த மேடுகளில் உற்பத்தியாகி, சிறிது தூரம் வடக்காக ஓடி; பிறகு கிழக்குக் கரை சமவெளியில் இறங்கி வங்காள விரிகுடாவில் விழுகிறது. இதின் டெல்டா செழிப்பானது.

4. கோதாவரி.—இது மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, வங்காள விரிகுடாவில் விழுகிறது. தக்ஷிணத்திலுள்ள நதிகளில் இது மிகவும் நீளமானது.

5. கிருஷ்ணா.—இதுவும் மேற்குமலைத் தொடரில் உற்பத்தியாகி கிழக்கில் வங்காள விரிகுடாவை யடைகிறது,

6. காவிரி.—இந்நதியும் மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி, தென்கிழக்காக பாய்ந்து வருகிறது இதன் சமவெளி தென் இந்தியாவில் மிகவும் அகலமானது, இந்த சமவெளிக்குத் தஞ்சாவூர் ஜில்லா என்று பெயர்.

7. வைகை என்னும் சிறிய நதி ஏலக்காய் மலைகளில் உற்பத்தியாகி, மதுரை ஜில்லாவில் பாய்ந்து மன்னார்குடாவில் விழுகிறது.

8. தாமிரவரணி.—ஆறும் ஏலக்காய் மலைகளில் உற்பத்தியாகி திருநெல்வேலி ஜில்லாவை செழிக்கச் செய்து மன்னார் குடாவில் விழுகின்றது.

9. வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை,—இம் மூன்று நதிகளும் மைசூர் பீடபூமியில் உற்பத்தியாகி, கோதாவரிக்கும், கிருஷ்ணாவுக்கும் இடையிலுள்ள சமவெளியில் பாய்ந்து வங்காள விரிகுடாவில் விழுகின்றன.

10. பெரியாறு என்னும் ஆறு ஏலக்காய் மலைகளில் உற்பத்தியாகி மேற்கு முகமாய் அரபிக்கடலை நோக்கி ஓடுகின்றது. இதில் ஒரு பெரிய அணை போட்டுத்தடுத்து அதின் ஜலம் கிழக்கு முகமாய் ஓடி மதுரை ஜில்லாவுக்கு பிரயோஜனப்படும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். மற்றபடி, இந்நதியின் ஜலம் யாதொரு பிரயோஜனமின்றி அரபிக்கடலில் போய் சேர்ந்திருக்கும்.

11. பர்மாவில், ஐராவதி, சால்பின், சிட்டகாங்க் என்னும் நதிகள் முக்கியமானவை. இதெல்லாவற்றிலும் ஐராவதி நதியே பர்மாவுக்கு விசேஷமானது. இத்துடன் நாட்டு போக்கு வரவுக்கு வெகுவாய் பயன் படுகிறது. இந்நதிக்கரை ஜனநெருக்கமானது.

## இந்தியாவின் விளைபொருள்கள்.

நம் தேசத்தின் ஐசுவரியத்திற்கு ஆதாரமானவை நம் தேசத்தில் கிடைக்கும் பொருள்கள்தான். இப்பொருள்களை இயற்கைப் பொருள்களென்றும், செயற்கைப் பொருள்களென்றும் பிரிக்கலாம். இயற்கைப் பொருள்கள் மூன்று வகைப்படும். அவையாவன (1) தாதுப்பொருள்கள், (2) தாவரப்பொருள்கள், (3) பிராணிப் பொருள்கள்.

## இந்தியாவின் தாதுப்பொருள்கள்.

நிலக்கரி.—இது வங்காளத்தில் ராணிகெஞ்சு, ஜெர்ரியா, கிரிதி என்ற இடங்களிலும், அஸ்ஸாம் தேசத்திலும், ஐதராபாத் நாட்டில் சிங்கரேனி என்னும் இடத்திலும் கிடைக்கிறது.

இரும்பு.—இது ராணிகெஞ்சிலும், பீஹார் மாகாணத்தில் மயூரபாஞ்ச் ஜில்லாவிலும், சென்னையில் சேலத்திலும் அகப்படுகிறது.

உப்பு.—இது பஞ்சாபில் உப்புமலைத் தொடரிலிருந்தும், ராஜபுதனத்திலும், பெரும்பாலும் சமுத்திர ஜலத்தினின்றும் எடுக்கப்படுகிறது.

தங்கம்.—இது மைசூர் நாட்டில் கோலார் என்னுமிடத்தில் அதிகமாக அகப்படுகிறது.

மண்எண்ணெய்.—பர்மாவில் அநேக இடங்களில் அதிகமாக அகப்படுகிறது.

ஈயம், தகரம்.—பர்மாவிலும், திருவாங்கூரிலும் கிடைக்கிறது.

மாங்கனிஸ்.—இது எஃகு செய்ய உதவுகின்றது. சென்னையில் விசாகப்பட்டணத்திற்கு அருகிலும், மத்திய மாகாணத்திலும் அதிகமாகக் கிடைக்கிறது.

## தாவரப் பொருள்கள்.

1. ஹிமாலயப் பிரதேசத்தில், மலை அடிவாரத்தில் மூங்கில், பனையைப்போன்ற மரங்கள் ஜாஸ்தியாகவும், இதற்கு சற்று உயரத்தில் சகலவிதமான மரக்காடுகளும், இதற்குமேலே புல் பிரதேசமும் உறைபனியும் காணப்படுகின்றன.

2. அஸ்ஸாமில் டீ, சின்கோனு, அரிசி முதலியவை விளைகின்றன.

3. பஞ்சாபில் புல் ஜாஸ்தி; ஆடுமாடுகள் அதிகம்.

4. வடமேற்கு மலைப்பிரதேசம் வறட்சியான பூமி. மழை 10 அங்குலத்திற்கு மேலில்லை. இங்குள்ள ஜனங்களில் சிலர் வியாபாரம் செய்தும் பலர் கொள்ளை அடித்தும் சண்டைபோட்டும் ஜீவனும்சம் செய்கிறுர்கள். பொதுவாக இந்த ஜனங்கள் நாகரீகத்தில் குறைவுள்ளவர்கள்.

5. கங்கா சமவெளியில், நெல், சணல் ஏராளமாக பயிரிடப்படுகிறது. நதி ஓரமாய் மேற்கில் செல்லச்செல்ல கோதுமை, தினை, கரும்பு, அபின், அவுரி முதலியவைகள் பயிராக்கப்படுகின்றன.

6. சிந்து சமவெளியின் வடக்கு பாகத்தில் கோதுமையும், தெற்கில் பருத்தியும் வளருகிறது.

7. தக்ஷிணத்தில் பருத்தி, எண்ணை வித்துக்கள் தேயிலை, தேங்காய் முதலியன பயிராக்குகிறுர்கள்.

மேல்கரை, கீழ்கரை சமவெளிகளில் நெல் ஏராளமாகயிருக்கிறது; உள்நாட்டுப்புறங்களில் தினை, கம்பு, சோளம் முதலியவை அதிகமாகக் காணப்படுகின்றன.

8. பர்மாவில் காடுகள் ஜாஸ்தி அங்கே உள்ள தாவரப்பொருள்கள் நெல், தேக்கு, ரப்பர், எண்ணை வித்துக்கள் முதலியன.

9. டீ, காப்பி.—நீலகிரி, அஸ்ஸாம் மலைச்சரிவுகளில் பயிரிடப்படுகின்றன.

10. வாசனை சமான்கள் திருவாங்கூரில் விளைகின்றன.

## பிராணிகளும், பிராணிப் பொருள்களும்.

பிராணிகளைக் காட்டு மிருகங்களாகவும், நாட்டுப் பிராணிகளாகவும் பிரிக்கலாம்.

### 1. காட்டு மிருகங்கள்.

யானை, புலி, சிறுத்தைப்புலி, நரி, இன்னும் பலவித மிருகங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன.

### 2. நாட்டுப் பிராணிகள்.

1. யானை.—இது காட்டு மிருகமாயினும், நன்ருய் பழக்கின பிறகு மனிதருக்கு அதிகப் பிரயோஜனமுள்ளதா யிருக்கிறது.

இவைகள் காட்டுப் பிராந்தங்களில் வெட்டிப் போடப்பட்ட மரங்களை இழுப்பதற்கும், மலை நாடுகளில் பிரயாணம் செய்வதற்கும் அதிகப் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

2. எருதுகள்.—நம்நாடு விபசாய நாடாயிருப்பதால் எருதுகள் ஏராளமாக விருக்கின்றன. இந் நாட்டில் இரண்டு பேருக்கு ஒரு எருது வீதம் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

3. எருமைகள்.—சுமார் 280 லக்ஷம் இந்தியாவிலும் பர்மாவிலும் இருக்கின்றன. இவை பர்மாவில்தான் ஜாஸ்தி.

4. பசுக்கள்.—எங்கும் வளர்க்கப்படுகின்றன.

5. செம்மறி ஆடுகள்.—சுமார் 220 லக்ஷம் செம்மறி ஆடுகள் இந்தியா, பர்மா தேசங்களில் இருக்கின்றனவாம். இவைகள் முக்கியமாக மலைப்பிராந்தங்களில் காணப்படுகின்றன. பொதுவில் மாமசத்திற்காகவும் ரோமத்திற்காகவும் இவைகளை வளர்க்கின்றார்கள்.

6. வெள்ளாடுகள்.—எங்கும் காணப்படுகின்றன. இவைகளை லேசில் வளர்க்கலாம்.

7. குதிரைகள்.—சுமார் 2 லக்ஷம் குதிரைகள் நம்தேசத்தில் இருக்கின்றனவாம். நம்நாட்டில், இதர தேசங்களில் போல் குதிரைகளை உழுகிறதற்கு உபயோகப்படுத்துகிறதில்லை.

8. கழுதைகளும், கோவேறு கழுதைகளும்.—மலைப்பிராந்தங்களில் சவாரி செய்ய உபயோகப்படுகின்றன.

9. ஒட்டை.—பாலைவனப் பிரதேசங்களில் அதிக பிரயோஜனமானவை. இதின் கால்கள் பாலையின் மணலில் நடக்கத்தக்கதாக அமைக்கப்பட்டவை. ஜலமில்லாத பாலை வனத்தில் பலநாட்களுக்கு ஜலம் பருகாமல் இந்த மிருகம் ஒன்றே இருக்கமுடியும்.

## பிராணிப் பொருள்கள்.

1. பட்டு.—பட்டுப் புழுக்களின் கூடுகளிலிருந்து பட்டு அகப்படுகிறது. இப்புழுவுக்கு முசுக்கொட்டை இலை ஆகாரமானதால், முசுக்கொட்டைச் செடி எங்கே உண்டோ அங்கே பட்டும் அதிகமாகக் கிடைக்கும் வங்காளத்திலும், மைசூரிலும் பட்டு கிடைக்கிறது.

2. ரோமம்.—செம்மறியாட்டின் ரோமம் கதகதப்பைத்தரும் உடைகளைச்செய்வதற்கு உபயோகம். குளிர் பிரதேசங்களிலுள்ள ஆடுகளுக்கு ரோமம் நீளமாயிருக்கிறது. காஷ்மீரத்தில் ஆடுகள் ஜாஸ்தி; காஷ்மீர சால்வைகள் பிரசித்திபெற்றவை.

3. தோல்.—ஆடு மாடுகள் உள்ள இடங்களில் இது கிடைக்கும். முக்கியமாக சென்னையில் ஜாஸ்தியாக இருக்கிறது.

## செயற்கைப் பொருள்கள்.

இந்தியாவில் செயற்கைப் பொருள்களின் உற்பத்தி வெகு குறைவு. இயந்திரசாலை தொழில் விருத்தியாக வேண்டுமாயின் இயற்கைப்பொருள் எளிதில் கிடைக்கவேண்டும். இயந்திரங்கள் சமீபத்திலேயே செய்யப்படவேண்டும். நிலக்கரி, மின்சாரம்போன் றவைகள் அருகில் அகப்படவேண்டும். செய்யப்பட்ட பொருள்களை சீக்கிரம் வெளியிடங்களுக்கு அனுப்புகிறதற்கு போக்கு வரவு மார்க்கங்கள் இருக்கவேண்டும். இந்தியாவில் இயற்கைப் பொருள் கள் எளிதில் கிடைத்தாலும், மற்ற மூன்று சாதனங்களும் குறைச் சலாக இருக்கின்றன. இவைகள் கூடியவரை எங்கேயாவது அமைந் திருந்தால் அங்கே இயந்திரத்தொழில்சாலைகள் விருத்திக்கு வந்தி ருக்கின்றன.

பருத்தி சாலைகள்.—பம்பாயிலும், ஆமதாபாத்திலும் இருக் கின்றன.

சணற் சாலைகள்.—கல்கத்தா, டக்கா என்னும் இடங்களில் ஏராளமாக விருக்கின்றன.

ரோம நேசவு.—கான்பூரிலும், காஷ்மீரத்திலும் பட்டு நேசவு ஆக்ரா, காசி, அமரிட்சார் என்னுமிடங்களிலும், செம்பு, பித்தளை, ஈயம் முதலிய உலோக வேலைகள்—சென்னையில் மதுரை, திண்டுக் கல், பாலக்காடு என்னும் பட்டணங்களிலும், ஐக்கியமாகாணத் தில் காசி, முரதபாத் என்னும் நகர்களிலும் செய்யப்படுகின்றன.

கைத்தறி நேசவு வேலைக்கு மதுரை, காஞ்சிபுரம், ஆரணி, டக்கா, ஒலூர் என்னும் இடங்கள் பிரசித்தி பெற்றவை.

இரும்பு வேலை.—பீகாரில் டாட்டா நகரிலும், வங்காளத்தில் பாரகரிலும் செய்யப்படுகின்றன.

தோலால்.—பொருள் செய்தல் கான்பூரிலும் சென்னையிலும் ஜாஸ்தி.

## ஜனத்தொகை.

நம் தேசத்தில் ஜனத்தொகை சுமார் 35 கோடி. உலகில் உள்ள ஜனங்களில் ஐந்தில் ஒருபாகம் இந்தியாவில் இருக்கிறார்கள். நம் தேசத்திலுள்ள ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறு கோடு போட ஆரம்பித்தால், அக்கோடுகளைப் போட்டு முடிக்க தூங் கும் நேரம், சாப்பிடும் நேரம் தவிர ஒருவருக்கு ஐந்து வருஷம் பிடிக்கும் என ஒருவர் கூறுகிறார். இந்நாட்டில் சில இடங்களில் ஜன நெருக்கமாயும் சில இடங்களில் குறைச்சலாயுமிருக்கிறது. சம வெளிகளிலும், ஆற்றுப் படுகைகளிலும், விபசாயம் எந்தெந்த இடங்களில் உண்டோ அவ்விடங்களிலும் ஜன நெருக்கம் ஜாஸ்தி மலைப்பிராந்தியங்களிலும், காடுகளிலும், பாலைவனங்களிலும் ஜனங்கள் சொற்பமாயிருக்கிறார்கள்.

## பாஷை.

மொத்தம் 147 பாஷைகள் இந்நாட்டில் உண்டு. தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுக்கு முதலானவை முக்கிய பாஷைகள் வட இந்தியாவில், பெங்காலி, உரியா, ஹிந்தி, ஹிந்துஸ்தானி, பஞ்சாபி, சிந்தி, குஜருத்தி, மராத்தி முதலிய பாஷைகள் முக்கியமானவை.

## மதங்கள்.

இந்தியாவில் மதங்கள் பல உண்டு. ஹிந்துக்களுக்கு க்ஷேத்திர ஸ்தலம் காசி; இராமேசுவரம். மகமதியருக்கு லாகூர்; புத்தர்களுக்கு வட இந்தியாவிலுள்ள புத்தகயாவும்; பர்மாவிலுள்ள ரங்கூன் மான்டிலே என்னும் நகர்களுமாம்.

## அரசாங்கப் பிரிவுகள்.

இந்திய ராஜ்யம் முழுவதும் ஆங்கிலேயருடைய ஆளுகையிலிருக்கிறது. அதில் பல பிரதேசங்கள் இந்திய சிற்றரசர்களால் ஆளப்படுகின்றன. இவர்கள் ஆங்கில மன்னருக்குக் கப்பம் கட்டி வருகிறார்கள். இத்தேசத்தில் இதர ஐரோப்பியருக்கும் சில இடங்கள் இருக்கின்றன. இத்தேசத்தை துரைத்தனத்தார் அரசாங்கத்துக்காக பலபிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஆள கவர்னர்களை நியமித்திருக்கிறார்கள். கவர்னர்களால் ஆளப்படும் பிரிவுக்கு ராஜதானி என்று பெயர். இந்தியாவின் ராஜதானிகள் எவையென்றால்:—

(1) பஞ்சாப் மாகாணம்.—இதற்குத் தலைநகரம் லாகூர். இங்கே அமிர்தசரஸ் என்னும் வேறொரு அழகிய பட்டணமும் உண்டு.

(2) ஐக்கிய மாகாணம்.—இதற்குத் தலைநகரம் அல்லகாபாத். இம்மாகாணத்தில் காசி, கான்பூர், ஆக்ரா என்னும் பெரிய நகரங்களிருக்கின்றன.

(3) பீஹார், ஒரிஸ்ஸா.–இதற்குத் தலைநகரம் பாட்னா. இங்கே காயா என்னுமோர் பெரிய பட்டணமும் உண்டு.

(4) வங்காளம்.—இதற்குத் தலை நகரம் கல்கத்தா. இதில் டக்கா என்னும் நகரமும் பிரஸித்திப் பெற்றது.

(5) அஸ்ஸாம்.—இதற்குத் தலைநகரம் ஷில்லாங்க்.

(6) சிந்து.—இதற்கு முக்கிய பட்டணம் கராச்சி.

(7) பம்பாய்.—இதற்கு பம்பாய் நகரம் தலைமையானது பூனா என்னும் ஒரு முக்கிய நகரமும் இங்கிருக்கிறது.

(8) மத்திய மாகாணங்கள்.—இதற்கு நாகபுரி தலைநகரம்.

(9) சென்னை.—சென்னைப்பட்டணம் இதற்குத் தலைமையானது. புதுச்சேரி, கடலூர், தூத்துக்குடி, தனுஷ்கோடி இவைகள் இம்மாகாணத்தின் கீழ்கரையிலுள்ள முக்கிய துறைமுகங்கள். தனுஷ்கோடிக்கும் இலங்கைத் தீவுக்கும் 22 மைல் தானிருக்கிறது. இத்தீவுக்குப் போகிறவர்கள் தனுஷ்கோடி வழியாய் போகிறார்கள். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை இங்கு உள்நாட்டிலுள்ள முக்கிய பட்டணங்கள்.

(10) பர்மா மாகாணத்திற்குத் தலை நகர் ரங்கூன்.

மேற் சொல்லப் பட்டவைகள் தவிர இந்தியாவில் வேறு சில மாகாணங்கள் ஆங்கிலத் தலைமைக் கட்டளைப் பெற்றவர்களால் (சீவ் கமிஷனர்களால்) ஆளப்பட்டு வருகின்றன. அவையாவன:—(1) பிரிட்டிஷ், பெலுசிஸ்தானம், (2) அஜ்மீர்-மெர்வாரா, (3) குடகு, (4) அந்தமான், நிகோபார் தீவுகள், (5) டில்லி.

வடமேற்கு எல்லை மாகாணம் இது வரைக்கும் சீவ் கமிஷனரால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் சில மாதங்களுக்கு முன் அங்கு ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டார்.

இந்தியாவில் மூன்றி லொன்றுக்கு மேற்பட்ட பிரதேசம் சுதேச அரசர்களால் ஆளப்படுகின்றது. இப்படிப்பட்ட நாடுகள் சுமார் **675** உள்ளன. அதில் முக்கியமானவை (1) ஐதராபாக்கம், (2) மைசூர், (3) காஷ்மீரம், (4) திருவாங்கூர், (5) குவாலியர், (6) ஜோதிபுரி, (7) பரோடா.

பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமானவை கீழ்கரையில் காரைக்கால், புதுச்சேரி, ஏனும், சந்திரநாகூர், மேற்கரையில் மாஹி என்ற பட்டணங்கள்.

போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான ஊர்கள்—கோவா, தையு, டாமன் இம்மூன்றும் மேற்கரையில் இருக்கின்றன.

## போக்கு வரவு சாதனங்கள்.

வியாபாரமும் பிரயாணமும் சீக்கிரத்தில் நடைபெற போக்கு வரவு சாதனங்கள் அவசியம். இந்தியாவின் போக்கு வரவு மார்க்கங்கள் மூன்று வகைப்படும், அவையாவன :—

(1) இருப்புப் பாதைகள்.—இந்தியாவில் இதுவரைக்கும் போடப்பட்டுள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் சுமார் 40,000 மைல். இவை சின்ன ரயில் (மீட்டர்கேஜ்), பெரிய ரயில் (பிராட்கேஜ்) என்று இரண்டு வகைப்படும். மீட்டர்கேஜ் 3 அடி 3⅜ அங்குலம் அகலமானது; பிராட்கேஜ் இருப்புப்பாதைகள் 5 அடி 6 அங்குலம் அகலமானது. இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையில் உயர்ந்த மலைகளிருப்பதால் இவ்விரண்டு நாட்டிற்கும் இருப்புப் பாதை போக்கு வரவு கிடையாது.

(2) ரஸ்தாக்கள்.—ஊர்களை ஒன்றோடொன்று சம்பந்தப் படுத்துவது ரஸ்தாக்கள் (ரோட்டுகள்). நம் நாட்டில் இவைகள் பெரும்பாலும் கப்பிபோடாத மண் ரஸ்தாக்களாயிருக்கின்றன. இத்தேசத்தின் ரஸ்தாக்களின் மொத்த நீளம் சுமார் 2,00,000 மைல் ஆனால் இதை மற்ற தேசங்களுடன் ஒற்றுப்பார்த்தால் இது மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும்.

(3) ஜலமார்க்கங்கள்.—நம் தேசத்தில் கங்கை பிரம்மபுத் திரா, ஐராவதி நதிகள் போக்கு வரவுக்கு வெகுவாக உபயோகப் படுகின்றன. சிந்து நதியும், சென்னையிலிருந்து கிருஷ்ணா டெல் டாவுக்குச் செல்லும் பக்கிங்காம் கால்வாயும், போக்கு வரவுக்குப் பயன்படுகின்றன. கோதவரி கிருஷ்ணா ஆற்றுப்பாசனத் தலைக்கால் வாய்களில் படகுகள் போக்குவரவுண்டு.

## இந்தியாவின் வியாபாரம்.

இந்தியாவின் உள்நாட்டு வியாபாரம் வெளிநாட்டு வியாபா ரத்தை விட ஜாஸ்தி. வருஷத்தில் சுமார் 500 கோடி ரூபாயிக்கு இந்தியா அன்னிய தேசங்களுடன் வியாபாரம் செய்கிறது.

இந்தியாவின் ஏற்றுமதி.—அரிசி, கோதுமை, பஞ்சு, எண்ணை வித்துக்கள், சணல், பருத்தி, அபின், தோல், தேயிலை, அரக்கு, ரோமம், காப்பி, அவுரி முதலியன. இவைகள் பெரும்பாலும் இயற் கைப் பொருள்கள்.

இறக்குமதி.—பருத்திநூல், பருத்தித் துணிகள், உலோகத் தகடுகள், உலோக சாமான்கள், சர்க்கரை, இயந்திரங்கள், எண் ணெய், ரோமசாமான்கள், பட்டு ஆடைகள், மருந்து, இருப்புப் பாதை, கண்ணாடி சாமான்கள் முதலியன. இவைகள் பெரும்பாலும் செயற்கைப் பொருள்கள்.

# பூகோளம்.


மேற்கு கோளார்த்தம்.
கிழக்குகோளார்த்தம்.
வட அமெரிக்கா
ஐக்கியமாகாணங்கள்
கனடா
பஸிபிக் மஹா சமுத்திரம்
வட அட்லாண்டிக் மஹா சமுத்திரம்
உத்திராயண ரேகை
மெக்ஸிகோ
மத்திய அமெரிக்கா
பூமத்தியரேகை
தென் பஸிபிக் மஹா சமுத்திரம்
தக்ஷிணாயன ரேகை
தென் அமெரிக்கா
பிரேஜில்
பெரு
தென் அட்லாண்டிக் மஹா சமுத்திரம்
நியூ ஜிலாந்து
தக்ஷிண மஹா சமுத்திரம்
ஐரோப்பா
ஆசியா
ஆப்பிரிகா
திபெத்து
பர்மா
இந்தியா
அரபிக் கடல்
பசிபிக் மஹா சமுத்திரம்
பிலிப்பைன் தீவுகள்
இந்து மஹா சமுத்திரம்
மடகாஸ்கர்
ஆஸ்திரேலியா
அட்லாண்டிக் மஹா சமுத்திரம்
வட துருவம்
தென் துருவம்
தக்ஷிண கண்டம்

இறைவன் துணை

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

தேச சரித்திரம் 7.

# உலக பூகோளம்.

ஆசிரியர் :—ஜெ. அமலதாஸ் பி. எ., எல். டி.,
ஆசிரியர், பின்டிலே காலேஜ், மன்னார்குடி.

## கண்டங்களும் சமுத்திரங்களும்.

பூமி உருண்டை வடிவமுடையது. நீங்கள் எதிரில் பார்க்கிற படத்தில், உருண்டையான பூமியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காண்பித்திருக்கிறதைப் பாருங்கள். இவைகளில் கிழக்கு பாகத்துக்கு குணகோளார்த்தமென்றும் மேற்குப் பகுதிக்கு குடகோளார்த்தமென்றும் பெயர். அவைகளில் பூமிபாகம் குறைவாகவும், ஜலபாகம் அதிகமாயிருக்கிறதையும் கவனியுங்கள். விஸ்தீரணத்தில் பூமிபாகம் கால் பங்காகவும், ஜலபாகம் முக்கால் பங்காகவும் இருக்கின்றன. ஜலபாகத்தின் பெரிய பிரிவுகளுக்கு சமுத்திரம் என்றும் பூமிபாகங்களுக்கு கண்டங்களென்றும் பெயர். சமுத்திரங்களின் பெயரை பெரியவைகளிலிருந்து சிறியவை மட்டும் நீங்களே படத்திலிருந்து கண்டுபிடியுங்கள். கண்டங்களின் பெயரையும் அப்படியே கண்டு பிடியுங்கள். பிறகு, நீங்கள் யோசித்தவைகளும், அடியில் கண்டவைகளும் ஒத்திருக்கிறன்னவாவென்று பாருங்கள்.

| சமுத்திரங்கள். | கண்டங்கள். |
|---|---|
| 1. பஸிபிக் சமுத்திரம் | 1. யூரேசியா |
| 2. அட்லான்டிக் சமுத்திரம் | 2. ஆப்பிரிகா |
| 3. இந்து சமுத்திரம் | 3. வட அமெரிகா |
| 4. உத்திர சமுத்திரம் | 4. தென் அமெரிகா |
| 5. தக்ஷிண சமுத்திரம் | 5. ஆஸ்திரேலியா |

இவைகளில் வட அமெரிகா, தென் அமெரிகா குடகோளார்த்தத்திலும் மற்ற மூன்றும் குணகோளார்த்தத்திலு மிருக்கிறதைப் பாருங்கள். யூரேஷ்யா என்பது ஐரோப்பா, ஆசியா சேர்ந்தது. குண - கிழக்கு, குட - மேற்கு, கோளம் - உருண்டை, அர்த்தம் - பாதி.

## சீதோஷ்ண மண்டலங்கள்.

வரையப்பட்டிருக்கும் பூகோள படத்தில், குருக்காகவும் நெடுக்காகவும் கோடுகள் இழுக்கப்பட்டிருக்கிறதை கவனியுங்கள். இவைகள் பூலோகத்தில் மெய்யாகவே இருக்கிற கோடுகளல்ல. பட்டணங்களையும் பலஇடங்களையும் சட்டெனத் தெரிந்து கொள்ள நாம் ஏற்படுத்திக் கொண்ட ஒரு உபாயம். இவைகளில் நெடுக்குக் கோடுகளுக்கு தீர்க்க ரேகைகள் (Longitude) என்றும், குறுக்கு

கோடுகளுக்கு அக்ஷரேகைகளென்றும் பெயர். இந்த ரேகை களுக்கு இடையிலுள்ள தூரத்தை அம்சங்களாக (Degrees) கணக்கிட்டிருக்கிறார்கள்.

பூகோள படத்தின் மத்தியில் 0 என்ற அம்சத்தை பாருங் கள். அந்த ரேகைக்கு நிரக்ஷரேகை அல்லது பூமத்திய ரேகை என்று பெயர். அதற்கு வடக்கிலும் தெற்கிலும் $23\frac{1}{2}$° (அம்சத் தில்) புள்ளிக் கோடுகளிட்டிருப்பதைப் பாருங்கள். நிரக்ஷ ரேகைக்கு வடக்கிலுள்ள புள்ளிக் கோட்டுக்கு உத்திராயணரேகை யென்றும் தெற்கிலுள்ளதற்கு தக்ஷிணாயணரேகை யென்றும் பெயர். வடதுருவத்திற்கும், தென்துருவத்திற்கும் $23\frac{1}{2}$° தூரத் தில் ஒரு புள்ளிகோடு இருப்பதை கவனியுங்கள்; அவைகளில், வடக்கிலிருப்பதற்கு வடதுருவரேகை யென்றும் தெற்கிலிருப்ப தற்கு தென்துருவரேகை யென்றும் பெயர்.

பூலோகத்தில் சீதோஷ்ணம் எங்கும் சமமானதல்ல. இடத் திற்கு இடம் சீதோஷ்ணம் மாறுகிறது. ஒரு இடத்தின் சீதோஷ் ணஸ்திதி சூரியனுடைய கிரணங்களைப் பொருத்தது. உத்திராயண ரேகைக்கும், நிரக்ஷரேகைக்கு மிடையிலுள்ள பிரதேசத்தில் சூரி யனுடைய செங்குத்தான கிரணங்கள் நடுப்பகலில் விழக்கூடியதாக இருப்பதினால், இப்பிரதேசம் அதிக உஷ்ணமுள்ளதாயிருக்கிறது. இக்காரணத்தால் இதற்கு உஷ்ண மண்டலம் என்பர். உஷ்ண மண்டலத்திலுள்ளவர் அநேகமாய் கருநிறமுடையோர். இங்கே உஷ்ணமும் மழையும் அதிகமாயிருப்பதினால் தாவரங்கள் புஷ்டி யாய் வளரும். இங்குள்ளவர்கள் கஷ்டப்பட்டு வேலைசெய்ய வேண் டியதில்லை. ஆகையால் இப்பிரதேசத்தினருக்கு சுறு சுறுப்பு கொஞ் சம் குறைவு.

உத்திராயண ரேகைக்கு வடக்கிலும் தக்ஷிணாயன ரேகைக்கு தெற்கிலும் சூரியனுடைய கிரணங்கள் சாய்வாக விழுவதினால் வடக் கிலும் தெற்கிலும் போகப் போக உஷ்ணம் குறைந்துகொண்டும், சீதளம் அதிகரித்தும் வருகிறது. ஆதலால் உலகத்தின் குளிர்ச்சி யான பாகங்கள் வடதுருவத்திற்கும் வடதுருவரேகைக்கு மிடை யிலும், தென் துருவம் தென்துருவரேகைக்கு மிடையிலுமிருப்ப தாக நாம் யூகித்துக் கொள்ளலாம். வடதுருவத்தைச் சுற்றியிருக் கிற இப்பிரதேசத்திற்கு உத்திர அதிசீதளமண்டலம் என்றும், தென் துருவத்தை சுற்றியிருக்கும் பிரதேசத்துக்கு தக்ஷிண அதிசீதள மண்டலமென்றும் பெயர். இந்த அதிசீதள மண்டலங் களில் வசிக்கும் ஜனங்கள் மிகவும் சொற்பம். இவர்கள் மிகவும் குட்டையானவர்கள். இவர்களுக்கு எஸ்கிமோஸ் (Eskimos) என்று பெயர். இவர்கள் பனிக்கட்டியினால் வீடுகட்டி அதில் வசிக்கின்ற னர். இங்கு அகப்படுவது ரெயின்டீயர் என்ற மான் ஒன்றுதான். ஆகையால் இவர்களுடைய ஆகாரம் இந்த மான்களின் மாம்சமும்

பாலும், அங்கு அகப்படும் சில மீன்களும் தான். இன்னும், இம்மண்டலங்களில் ஆறுமாதம் இரவும் ஆறுமாதம் பகலாயிருப்பதினால் (என் ?) இவர்கள் ஆகாரம் தேடிக்கொள்ள கஷ்டப்படுகிறார்கள். நாகரீகத்தில், பொதுவாக, இவர்கள் முன்னேற்ற மடையாதவர்.

மேற்கூறின உஷ்ணமண்டலத்திற்கும் அதிசீதளமண்டலத்திற்குமிடையிலுள்ள பிரதேசம் அதிக உஷ்ணமும், அதிகக் குளிர்ச்சியுமில்லாமல் மித சீதோஷ்ண முள்ளதாயிருக்கிறது. இவைகளில் வடக்கிலுள்ளதற்கு உத்திரமித சீதோஷ்ண மண்டலம் என்றும் தெற்கிலுள்ளதற்கு தக்ஷிணமித சீதோஷ்ண மண்டலமென்றும் பெயர். இப்பிரதேசத்திலுள்ளவர் அநேகமாய் வெண்மை நிறத்தினர். இவர்கள் உஷ்ணத்தின் அகோரத்திலும் சீதள கடுமையிலும் அகப்படாதவர்களாகையால் இவர்கள் சுறுசுறுப்பானவர்களும், சாஸ்திர ஆராய்ச்சி, கைத்தொழில் முதலியவைகளில் விருத்தியடைந்தவர்களாயும் இருக்கிறார்கள்.

## கண்டங்கள்

### 1. யூரேசியா,

பூகோள படத்தில் கிழக்குக் கோளார்த்தத்தில் ஒரு பெரிய கண்டம் வியாபித்திருப்பதைப் பாருங்கள். அதற்கு யூரேசியா என்று பெயர். இது ஆசியா என்றும் ஐரோப்பா என்றும் இரண்டு கண்டங்கள் அடங்கியது. இவை இரண்டிற்கும் இயற்கையமைப்பு நன்றாய் இருப்பினும், சரித்திரம் மிகவும் வேறுபடுகிறதினால், வெவ்வேறாக அவைகளைக் கவனிப்பது நன்று. முதலாவது நாம் ஆசியாவைப் பற்றி பார்ப்போம்.

ஆசியா எல்லாக் கண்டங்களிலும் பெரியது. இவ்வுலகிலுள்ள பூபாகத்தில் மூன்றில் ஒரு பங்கு இக்கண்டத்தில் அடங்கியுள்ளது. இக்கண்டமே ஆரியர்களுடைய முதல் இருப்பிடம். இதுவே கிறிஸ்துமதம், இந்துமதம், இஸ்லாம், புத்தமதம் முதலிய அநேக மதங்களின் இருப்பிடம். இதற்கும் ஐரோப்பா கண்டத்திற்கும் இடையிலுள்ள எல்லை யூரல் மலைத்தொடர்.

ஆசியாவின் கடற்கரை 5120 மைல் நீளமுள்ளது. வடக்கில் அதிகமாக பிளவுபட்டிருக்கிறது. ஆனால் வருஷத்தில் ஒன்பது மாதம் அங்கு பனிக்கட்டி உரைந்திருப்பதினால் வடக்குக் கடற்கரை பிரயோஜனமானதல்ல. கிழக்குக்கரையும் பிளவுபட்டிருப்பதனால் அங்கு அநேக தீவுகள்—ஜப்பான், பார்மோசா, பிலிப்பைன், போர்னியோ, முதலிய தீவுகள் காணப்படுகின்றன. தெற்கில், அரேபியா இந்தியா, இந்துசைனா என்ற தீபகல்பங்களிருக்கின்றன. (தீபகல்பமென்றால் என்ன என்றறிவதற்கு இந்தியாவின் பூகோளத்தைப் பார்க்க.)

இயற்கை யமைப்பு.—ஆசியாவின் இயற்கை யமைப்பு விசேஷித்தது. இங்கே உலகிலுள்ள பெரிய மலைகளும், மிகத் தாழ்வான சமவெளிகளும், ஆழமான பள்ளங்களும், மேடான பீடபூமிகளும் காணப்படுகின்றன. இக்கண்டத்தின் வடக்கில் சைபீரிய என்ற சமவெளி இருக்கிறது. இது எப்படி சரிவுற்றிருக்கிறதென்பதை அங்கு பாயும் நதிகளைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். மத்தியில் உலகிலுள்ள பெரிய மலைத்தொடர்களும் பீடபூமி பிரதேசங்களும் காணப்படுகின்றன. இதற்கு தெற்கில் ஆறுகளாலுண்டான சமவெளிகளிருக்கின்றன. இக் கண்டத்திலுள்ள நதிகள் சில வடக்கே உத்திர சமுத்திரத்திலும், சில பஸிபிக் சமுத்திரத்திலும், சில இந்து சமுத்திரத்திலும் விழுகின்றன. சில நதிகள் உள்நாட்டிலேயே சங்கமமாயிவிடுகின்றன. இக்கண்டத்தில் அநேகம் ஏரிகளுமிருக்கின்றன. இவைகளில் காஸ்பியன் கடல் எல்லாவற்றையும்விட பெரிய ஏரி என்று சொல்லலாம்.

சில போது விஷயங்கள்.—ஒரு கண்டத்தின் இயற்கையமைப்பிலிருந்து, ஆங்காங்குள்ள ஜனங்களின் தொழில்களை அறிந்து கொள்ளலாம். ஆசியாவின் கிழக்குக் கரையிலிருப்போர் கப்பலோட்டிகளும், கடல்பிரியருமாயிருக்கிறார்கள் (Sea-faring), மலைப் பிரதேசங்களிலுள்ளவர்கள் திட சரீரமுள்ள வீரர்களாயும், பீடபூமி பிரதேசத்திலிருப்பவர் ஆடுமாடு ஒட்டை முதலிவைவயோடு ஊர் ஊராய் பிரயாணம் பண்ணும் வியாபாரிகளாயும், சமவெளிகளிலுள்ளவர்கள் விவசாயம் செய்கிறவர்களும், கைத்தொழிலாளரும் தத்துவ ஞானிகளாயும் இருக்கின்றனர். ஆசியாவின் தென் கடற்கரையோரம் அதிகமாக உடைந்தில்லாததினால், இங்கே துறைமுகப் பட்டணங்கள் மிகவும் சில. பெரிய பட்டணங்களும் ஜன நெருக்கமுள்ள இடங்களும் உள் நாடுகளில்தான் இருக்கின்றன. இக்கண்டத்தில் பொதுவாக இருப்புப்பாதைகள் மிகக் குறைவானவை. இங்கே, வடக்கிலுள்ள சைபீரியாவில் 5000 மைல்களுக்கு மேல் நீளமுள்ள ஒரு இருப்புப்பாதை கிழக்கு மேற்காய் செல்லுகிறது. இதைவிட நீளமுள்ள பாதை உலகத்தில் எங்குமில்லை. பாலை மிகுந்த தென்மேற்கு நாடுகளிலும், மத்திய ஆசியாவிலும் வெகுகாலமாக ஒட்டகங்களின் மீது வியாபாரப் போக்கு வரவுகள் நடைபெற்று வருகின்றன. இந்த மார்க்கங்களை "காரவான்" (Caravan) பாதை என்று சொல்லுகிறார்கள். இவைகளை ஒட்டியே இப்போது இருபுப்பாதை போடுகிறார்கள்.

### சீதோஷ்ண ஸ்திதியும் விளைபொருள்களும்

(1). வடக்கு சமவெளியில் (சைபீரியா) மாரிகாலத்தில் குளிர் அசாத்தியமாயும், கோடை காலம் குருகலாயுமிருக்கிறது. அங்கே கோடை காலத்தில் அதிகமாய் மழை பெய்கிறது. இச் சமவெளியின் வடக்கு பாகத்தில் துந்தரப் பிரதேசமிருக்கிறது. இங்கே சிறு செடிகளும், பாசி வர்க்கத்தைச் சேர்ந்த பயிர்களுமே

காணப்படும். (2) துந்தரப்பிரதேசத்திற்குத் தெற்கில் ஊசிஇலைக் காடுகள் இருக்கின்றன. மத்திய ஆசியாவில் மழை சொற்பம். மலைச் சுடர்களால் சூழப்பட்டிருப்பதாகையால், இப் பிரதேசத்திற்கு மழை காற்று வர இடமில்லை. இங்கே கோபி என்ற பாலைவனம் இருக்கிறது. மற்ற இடங்கள் புல்வெளிகளாக இருக்கின்றன. இவ்விடம் கோடையில் அதிக உஷ்ணமாயும், மாரியில் அதிகக் குளர்ச்சியாயுமிருக்கிறது. (3) தென் மேற்கு நாடுகளில் மழை அதிகக் குறைவு. இங்கே கோடைகாலத்தில் அவ்வளவு உஷ்ணமில்லை; ஆனால் மாரிகாலத்தில் குளிர் அதிகம். இங்கே கோதுமையும், நாரத்தை, திராக்ஷை, ஈச்சை முதலிய பழம் தரும் மரங்கள் இருக்கின்றன. (4) தென்கிழக்கு நாடுகளில் பருவக் காற்றினால் மழை பெய்கிறது. இங்கே உஷ்ணமும் மழையும் அதிகம். இங்கே அடர்ந்த காடுகளும் (தேக்கு, கருங்காலி, சந்தனம், மூங்கில்) நெல், கோதுமை, கரும்பு, சணல், காப்பி, புகையிலை, பருத்தி முதலியவைகளும் பயிராகின்றன. நம் நாடாகிய இந்தியா இந்த பிரதேசத்தில் தானிருக்கிறது. (5) பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள மலேயாத்தீவு கூட்டத்தில் எந்த காலத்திலும் 80 டிகிரி உஷ்ணத்திற்குக் குறைவு இராது. ஆனால் எக்காலத்திலும் மழை அதிகமுண்டு இங்கே காடுகள் அதிகம். இவைகளுக்கு உஷ்ணக்காடுகளென்று பெயர்.

## ஜப்பான்.

ஆசியாவின் வடகிழக்கில் ஜப்பான் தீவுகளிருக்கின்றன. இவைகள் நாலு தீவுகளடங்கியவை. இத் தீவுகள் மலைப்பாங்கானவை. அவைகள் எரிமலை சம்மந்தமானவை. ஜப்பானில் கோதுமையும், அரிசியும் ஜாஸ்தியாகக் கிடைக்கிறது இங்கே பட்டுப்புழு உற்பத்தியாகும். முசுக்கட்டை மரங்கள் ஜாஸ்தி. ஆகையால் பட்டு அதிகமாய் கிடைக்கிறது. ஜப்பானியர் குள்ளமாகவும், பார்வைக்கு விசித்திரமாகவும் இருப்பர். அவர்கள் தைரியமும், பலமும் சுறுசுறுப்பும் மிகுந்தவர்கள். இவர்கள் தம்தேசத்தினர் சிலரை இங்கிலாந்து, அமெரிக்க முதலிய நாடுகளுக்கு அனுப்பி ஐரோப்பிய முறைகளை கற்றுக்கொண்டு இப்போது வியாபாரத்திலும் செல்வத்திலும் மேம்பாடு அடைந்திருக்கிறார்கள். ஜப்பான் ஒரு அரசனுடைய ஆளுகைக்குள்ளிருக்கிறது. அவர் மிக்காடோ என்றழைக்கப்படுவர். ஜப்பானியர் பெரும்பாலும் புத்தமதத்தைத் தழுவியுள்ளவர். ஜப்பானுக்கு தலை நகர் டோக்கியோ.

## சீனா.

ஆசியாவின் நாடுகளில் பெரியது இதுவே. இங்கே அரிசி, பட்டு தேயிலை முதலியவை அதிகமாக கிடைக்கிறது. இங்கே மூன்றுபெரிய நதிகளிருக்கின்றன. அவைகளில் 'ஹுவாங்கே' (Huang Ho) என்ற நதியில் அடிக்கடி வெள்ளம் வந்து பொருள் நாசம் ஜனநாசம் அதிகமாகிறபடியால் அந்நதிக்கு 'சீனாவின் துக்கம்' என்று பெயர்.

சீனவுக்கு பீகின் தலைநகரம். இங்கு பலமான அரசாட்சியில்லை. இதைச் சேர்ந்த மஞ்சூரியா நாடு யாருக்குச் சொந்தம் என்பதில் ஜப்பானியருக்கும் சீனருக்கும் சமீபகாலத்தில் ஒரு யுத்தம் நடந்தது.

ஆசியாவுக்குக் கிழக்கில் அன்டோலியா, ஸிரியா, அரேபியா, இராக், பாரசிகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிருக்கின்றன. தென்மேற்கில் ஸியாம், புரஞ்சு. இந்தோசைனு, கிழக்கிந்திய தீவுகள் என்பவை. இக்கண்டத்தில் நம்தேசமாகிய இந்தியா அதிக முக்கியமானது.

## 2. ஐரோப்பா.

பூகோளப் படத்தைப் பார்த்தால் ஐரோப்பா ஆசியா கண்டத்தைச் சேந்த ஒரு தீபகல்பம்போல் தோன்றுகிறது. ஆனல் இது ஒரு கண்டம். சிறியதாயிருப்பினும் இது எல்லா கண்டங்களிலும் முன்னேற்ற மடைந்திருக்கிறது. இதற்குக்காரணமென்ன? (1) ஐரோப்பா சமசீதள மண்டலத்திலிருப்பதால் ஜனங்கள் வருஷமுழுவதும் யாதொரு கஷ்டமின்றி வேலை செய்யக்கூடியவர்களாயிருக்கின்றனர். (2) இங்கே நிலக்கரியும் இரும்பும் அதிகமாய் கிடைக்கிறதினுல், தொழில் சாலைகள் ஏராளமாகவிருக்கின்றன. (3) இக்கண்டத்தில் பல இடத்திலும் ஜலபாகம் உட்சென்றிருப்பதால் கடற்கரை வெகு கோணல் மாணலாய் இருக்கிறது. இக்காரணத்தால் கப்பல் தங்குவதற்கேற்ற பல இடங்கள் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன, (4) ஐரோப்பாவானது ஆசியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா இம்மூன்றிர்க்கும் மத்தியிலிருப்பதால் அதன் வியாபாரத்திற்கு அனுகூலமாயிருக்கிறது.

**இயற்கையமைப்பு.** ஐரோப்பா பெரும்பாலும் சமவெளியாயிருக்கிறது. தெற்கிலும் மத்தியிலும் ஒரு மேட்டு நிலம் வளைந்து வியாபித்திருக்கிறது. இம் மேட்டு நிலத்தில் உயரமான மலைத்தொடர் ஆல்ப்ஸ். இதின் உச்சி எப்போதும் உரைபனியால் மூடப்பட்டிருக்கும், வடமேற்கில் ஸ்காண்டிநேவிய மலைத்தொடர்கள் அடங்கிய மேட்டு நிலமிருக்கிறது. ஐரோப்பாவின் ஆறுகள் பெரும்பாலும் மத்திய மேட்டு நிலத்திலிருந்து உற்பத்தியாகின்றன இவைகளில் ரைன், டான்யூப் என்ற நதிகள் முக்கியமானவை. ஐரோப்பாவிலுள்ள ஏரிகளில் ஆல்ப்ஸ் மலை பிரதேசத்திலுள்ள ஏரிகள் பார்வைக்கு மிகவும் அழகானவை.

**சீதோஷ்ண ஸ்திதியும் விளையும் பொருள்களும்.** ஐரோப்பாவுக்கு மழை கொடுப்பது அட்லான்டிக் சமுத்திரத்தில் அடித்து வரும் தென்மேற்குக் காற்று. ஐரோப்பாவின் வடக்கிலுள்ள நாடுகளில் குளிர்காலத்தில் குளிர்ச்சியாயும், குறுகிய கோடைகாலத்தில் சற்று உஷ்ணமாயுமிருக்கிறது. வடமேற்கு நாடுகளில் கோடையில் வெது வெதுப்பாயும், குளிர்காலத்தில் குளிர்ச்சியாயு

மிருக்கிறது. தெற்கில் மத்திய தரைக்கடலுக் கருகிலுள்ள நாடுகளில் கோடையில் வறண்டும் உஷ்ணமாயும் குளிர்காலத்தில் வெதுவெதுப்பாயுமிருக்கிறது.

ஐரோப்பின் வடபாகத்தில் துந்தரப் பிரதேசமிருக்கிறது. அதற்குத் தெற்கில் ஊசிஇலைக் காடுகள் காணப்படுகின்றன. இதற்கடுத்தாற்போல் அகலஇலைக் காடுகளிருக்கின்றன. இன்னும் தெற்கில் வர வர புல்பிரதேசம் காணப்படுகிறது. ஐரோப்பாவில் எல்லா இடங்களிலும் கோதுமை விளைகிறது. மத்திய தரை நாடுகளில் ஒலிவ் மரங்கள், பலவகை பழமரங்கள் இவைகள் காணப்படுகின்றன.

சில பொதுவிஷயங்கள். ஐரோப்பாவின் கடற்கரை யோரம் அதிகமாகக் கோணல்மாணலாயிருப்பதினால், எல்லா பக்கங்களுக்கும் கடற்கரை சமீபமாயிருக்கிறது. இக்காரணத்தால் இத்தேசத்திலுள்ளோர் கப்பலோட்டிகளும், கப்பல்வர்த்தகத்தில் முன்னேறினவர்களாயுமிருக்கின்றனர். பிளந்த கடற்கரையில் அநேக துறைமுகப்பட்டணங்களிருக்கின்றன. ஐரோப்பாவின் கரையோரத்தில் ஜன நெருக்கம் ஜாஸ்தி. உள்நாட்டில் அவ்வளவு இல்லை. இத்தேசத்தில் ரெயில் பாதை மூலமாயும், ஆறுகள் மூலமாயும், கடற்கரை மூலமாயும் வியாபாரத்துக்கு வேண்டிய போக்கு வரவு சாதனங்கள் லேசாக ஏற்பட்டுள்ளன. ஆகையால் உள்நாட்டு அயல் நாட்டு வர்த்தகங்களில் ஐரோப்பா விசேஷித்த விதமாய் முன்னேற்றமடைந்திருக்கிறது.

ஐரோப்பாவிலுள்ள நாடுகள்.—ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்சர்லண்ட், ஆஸ்டிரியா, ஹங்கேரி, இட்டலி, போலண்ட், கக்கே சுலோவேக்கியா, பல்கேரியா, துர்க்கியில் ஒரு பாகம், கிரீஸ், அல்பேனியா, ஸ்பெயின் போர்சுகல், ருமேனியா, ருஷ்யா, லுத்துயேனியா, லாட்வியா, எஸ்தோனியா, பின்ட்லண்ட் முதலியன.

## பிரிட்டிஷ் தீவுகள்.

கிரேட்பிரிடன் தீவு, ஐர்லண்டு தீவு இன்னும் பல சில்லரைத் தீவுகளும் சேர்ந்து பிரிட்டிஷ் தீவுகளென்று அழைக்கப்படுகின்றன. இவை இந்தியாவைவிட ஐந்து மடங்கு சிறியவைபெனினும், உலகத்திலுள்ள தேசங்களுக்கெல்லாம் மேலானது. இது இவ்வளவு உன்னத பதவிக்கு வந்ததின் காரணமென்ன ?

(1) இவை நில கோளத்தின் மத்தியிலிருக்கின்றன. ஐரோப்பாவின் நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குப் போகிற கப்பல்களும் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய தேசங்களுக்கு போகிற கப்பல்களும், கிரேட்பிரிட்டன் வழியாய்தான் போகிறது.

(2) இவை மித சீதோஷ்ண மண்டலத்திலிருப்பதால் இங்குள்ள ஜனங்கள் விவேகத்திலும் தேக வலிமையிலும் முன்னேற்றமுள்ளவர்களாயிருக்கின்றனர். சீக்கிரம் இளைத்து போகாமல் அதிக நேரம் உழைக்கக்கூடியவர்களாயு மிருக்கின்றனர்.

(3) இத் தீவுகளின் கடற்கரை அதிக நீளமாயிருப்பதினாலும், கடல் எல்லா பக்கங்களிலும் நிலத்துக்குள் அதிகமாய் ஊடுரிவிச் சென்றிருப்பதினாலும், இங்குள்ளவர்கள் கடலுக்கு அஞ்சுகிறதில்லை. இவர்கள் கப்பற் சண்டையில் மிகவும் தேறியுள்ளவர்கள். கப்பல் வர்த்தகத்தில் முன்னேற்றம் அதிகம். இவர்கள் மற்ற தேசங்களுக்கு சென்று ஆங்காங்கு தங்களுக்கு நாடுகளை ஸ்தாபிக்கின்றனர்.

(4) கிரேட்பிரிட்டன் ஒரு தீவாகையால், நாலாபக்கங்களிலும் சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கிறது. இதனால் சம சீதோஷ்ணம் ஏற்படுவதுமின்றி, விரோதிகள் இலேசாக இத் தீவுகள்மீது படையெடுத்து வரமுடியாது.

(5) கிரேட்பிரிட்டெனில் நிலக்கரியும், இரும்பும் கிடைக்கிறது. தொழில் சாலைகள் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆங்கிலேயர் பெரும்பாலும் செயற்கைப் பொருள் உற்பத்தியில் அமர்ந்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் தீவுகள் ஓர் அரசரால் ஆளப்பட்டு வருகின்றன. இவருக்கு உதவியாக இரு பெரும் சபைகளிருக்கின்றன. இவைகளில் ஜனங்களின் சபையே (House of Commons) சர்வ வல்லமை பொருந்தியது. இத் தீவுக்கு தலை நகரம் லண்டன். இது உலகத்திலுள்ள நகரங்களில் பெரியது. இத் தீவுகளிலிருந்துதான் ஆங்கிலேயர் நம் தேசத்துக்கு வந்து துரைத்தனம் செய்கிறார்கள்.

## 3. ஆப்பிரிக்கா.

உங்களுடனிருக்கும் பூகோள படத்தில் ஆப்பிரிக்கா என்னும் கண்டத்தைக் கண்டு பிடியுங்கள். விஸ்தீரணத்தில் இது ஆசியாவுக்கு அடுத்தாற்போலுள்ளது. இக் கண்டத்தின் ஜனங்கள் பெரும்பாலும் கறுப்பு நிறமுடையோர். மேலும் அவர்கள் பேய் பிசாசுகளை வணங்கும் அஞ்ஞானிகள். இக் கண்டத்தைப்பற்றிய விவரங்கள் வெகு காலமாக ஜனங்களுக்குத் தெரியாமலிருந்தது. இக் காரணங்களினால், இதற்கு இருண்ட கண்டம் (Dark Continent) என்று பெயர்.

இயற்கையமைப்பு.—இது ஒரு பீடபூமிக் கண்டம், அதாவது கடற்கரை யோரத்திலுள்ள குறுகிய சமவெளிகளைத் தவிர மற்ற விடமெல்லாம் பீடபூமிப் பிரதேசமாயிருக்கிறது. தென் ஆப்பிரிக்கா பீடபூமி எல்லா பக்கங்களிலும் மலைத் தொடர்களால் சூழப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்காவின் தெற்குக் கோடியில் 'நல் நம்பிக்கை'

முனையிருக்கிறது. பண்டைய காலத்தில் இந்தியாவுக்கு வருவோர் இம்முனையை சுற்றித்தான் வருவார். இப்போது சூயஸ் கால்வாய் வழியாய் வந்துவிடுகிறார்கள்.

நதிகளும் ஏரிகளும்.—ஆப்பிரிக்காவிலுள்ள நதிகளில் முக்கியமானவை, நைல், காங்கோ, நய்ஜர், சாம்பசி முதலியன. இவைகளில் நைல், 'எகிப்து தேசத்தின் தாய்' என்று சொல்லுவார்கள். இந்நதியில்லாவிடில் எகிப்துதேசம் ஒரு பாலையாகியிருக்கும். காங்கோ நதி ஆப்பிரிக்காவின் நதிகளெல்லாவற்றிலும் பெரியது. சாம்பஸி நதியில் விக்டோரியா நீர் வீழ்ச்சி என்று நீர் வீழ்ச்சி இருக்கிறது. இது உலகத்தின் நீர்வீழ்ச்சிகளிலெல்லாவற்றிலும் பெரியது (400 அடி உயரம்). இங்குள்ள ஏரிகளில், விக்டோரியா நியான்ஸா, ஆல்பர்ட் நியான்சா, தாங்கனிகா நியான்சா முதலியன பெரியவை.

## சீதோஷ்ணமும், விளையும் பொருள்களும்.

ஆப்பிரிகா கண்டத்தின் மத்தியில் பூமத்தியரேகை செல்லுவதால், இதின் பெரும்பாகம் உஷ்ண மண்டலத்திலிருக்கிறது. இதை உஷ்ணக்கண்டமென்று சொல்லலாம். பூமத்திய ரேகைக்கு இருபுறத்திலும் உள்ள நாடுகளில் உஷ்ணமும் மழையும் அதிகமிருப்பதினால் இங்கே உஷ்ணக் காடுகள் அதிகம். இங்கே கருங்காலி, தேக்கு இன்னும் பனைஜாதியை சேர்ந்தமரங்களும் அதிகம். மேலும், பருத்தி, காப்பி, மணிலாக்கொட்டை, பனை என்னும் வாழைப்பழம் தென்னை கரும்பு முதலியவை பயிராகின்றன. இக்காடுகளில் மனிதக் குரங்குகளும், சிங்கம், யானை முதலிய விலங்குகளும், இங்குள்ள நதிகளில் முதலை, நீர்யானை முதலியவைகளும் அதிகம். இப்பிரதேசத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் மழை குறைந்துகொண்டே போகிறபடியினால், இப் பாகங்கள் பெரும்பாலும் புல் பிரதேசங்கள். இங்கே சோளம், கம்பு, முதலியவை பயிராகின்றன. ஒட்டை, ஆடுகள் நெருப்புக்கோழி இவைகளை இங்குள்ள ஜனங்கள் வளர்க்கின்றனர். நெருப்புக் கோழிகளின் இறகுகள் அபூர்வமானவை. இப் புல் பிரதேசங்களின் வடக்கிலும் தெற்கிலும் பாலை வனங்களிருக்கின்றன. இப் பாலைகளில் மழையே இல்லை. ஆனால் இப்பாலைகளில் தண்ணீருள்ள இடங்களில் ஈச்சை வளருகின்றன. வட ஆப்பிரிகாவிலுள்ள பாலைக்கு சகாரா பாலையென்றும் தென் ஆப்பிரிகாவிலுள்ள பாலைக்கு கல்லகாரிப் பாலை யென்றும் கூறுவர். இப்பாலைகளுக்கு வடக்கிலும் தெற்கிலும், மத்திய தரை சீதோஷ்ணமிருக்கிறது. இங்கே சோளம், கோதுமை, திராக்ஷை, கிச்சிலி, முதலியவை வளருகின்றன.

சில பொதுவிஷயங்கள். ஆப்பிரிகாவில் ஜோகான்ஸ் பர்க் என்னுமிடத்திலும் தங்கம் ஏராளமாகக் கிடைக்கிறது. கிம்பர்லி என்னுமிடத்தில் வைரம் அதிகமாகக் கிடைக்கிறது. உலகத்தில் வேறே ஒரு இடத்திலும் வைரம் இவ்வளவு கிடைப்பதில்லை. ஆப்பிரிக்கர் நாகரீகத்தில் அதிகக் குறை உள்ளோர். ஜனங்கள்

பெரும்பாலும், விவசாயம் செய்தும், ஆடுமாடு மேய்த்தும், சுரங்க வேலை செய்தும் ஜீவனம் செய்கிருர்கள். இக்கண்டத்தில் ஓரம் நேராக இருப்பதினுல், இங்குள்ள ஜனங்கள் கப்பல் வேலைகளில் தேர்ந்தவரல்ல. ஆப்பிரிக்காவின் ஆறுகள் போக்கு வரவுக்கு ஏற்ற வையல்ல; இருப்புப் பாதைகளும் மிக்க குறைவு. ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய குடியேற்றம் இப்போது ஜாஸ்தியாயிருப்பதினுல், போக்கு வரவு சாதனங்கள் இப்போது அதிகரிக்கின்றன. இங்குள்ள பலவித ஜனங்களில், நீக்ரோ ஜாதியார் விசேஷித்தவர். இங்குள்ளவர்களில் அநேகர் இப்போது மகமதியராகி யிருக்கின்றனர். ஆப்பிரிகா முழுவதும் ஒரு அரசன் ஆட்சியிலில்லை. இக் கண்டத்தின் பாகங்கள், இங்கிலீஷ், பிரன்சு, பெல்ஜியம், போர்ச்சுகீஸ் ஸ்பேனிஷ் முதலிய ஐரோப்பியரின் ஆதிைத்துக்குள்ளிருக்கின்றன.

## 4. ஆஸ்திரேலியா.

1. ஆஸ்திரேலியா கண்டங்களில் சிறியது, தீவுகளில் பெரியது. இதின் விஸ்தீரணம் இந்திய ராஜ்ஜியத்திலும் ஒன்றரை மடங்கு அதிகம். இதன் பக்கத்தில், நியுகினியா, நியுசிலண்ட், முதலிய பல தீவுகளிருக்கின்றன. இவைகளெல்லாம் சேர்ந்து 'ஆஸ்ட்ரலேசியா' என்று அழைக்கப்படும். இக்கண்டம் மற்றக் கண்டங்களிலிருந்து அதிக தூரத்திலிருப்பதால் இது இருப்பது உலகினருக்கு அநேக காலமாகத் தெரியாதிருந்தது.

கடற்கரை லக்ஷணம். கடற்கரை ஆப்பிரிக்காவின் கரையைப்போல் நேரானது. கடல் நிலத்துக்குள் ஊடுரிவிச் செல்லவில்லையாகையால் துரைமுகப் பட்டணங்கள் அதிகமில்லை. ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு பாகத்தில் சுமார் 1200 மைலுக்கு பவளக் குன்றுகளிருக்கின்றன. (படத்தைப் பார்க்கவும்).

இயற்கையமைப்பு. ஆஸ்திரேலியா ஓரங்களில் உயர்ந்தும், மத்தியில் குழிந்துமிருக்கின்றது. மேற்க்குக் கரையோரத்தில் குறுகிய சமவெளியிருக்கிறது. கண்டத்தின் மேற்குப் பாகத்தில் பீடபூமியிருக்கிறது. கிழக்குக் கரையோரத்தில் உயரமான மலைத் தொடர் இருக்கிறது. இம்மலைத்தொடருக்கும் பீடபூமிக்குமிடையே சமவெளி யொன்று இருக்கிறது. இச்சமவெளிக்கு நடுவே ஒரு தாழ்ந்த மேட்டு நிலமுமிருக்கிறது. கிழக்கு மலைத் தொடருக்கும் கடற்கரைக்கு மிடையில் சமவெளி யொன்று இருக்கிறது.

ஆறுகளும் ஏரிகளும். இக்கண்டத்தின் ஆறுகள் கரையோரத்திலுள்ள பீடபூமி விழும்புகளில் உற்பத்தியாவதால் பெரும்பாலும், சிறியவையும், வேகமுடைய வனுயுமிருக்கின்றன. இக்காரணத்தால் இங்குள்ள நதிகள் வேளாண்மைக்குறியவையல்ல. ஆஸ்ட்ரேலியாவில் மர்ரே டார்லிங் நதியே பெரியநதி. இது 1300 மைல் நீளமுள்ளது. ஏரிகளில் 'ஈரி' ஏரி விசேஷமானது.

சீதோஷ்ணமும், விளையும் பொருள்களும். படத்தில் தக்ஷிணாயன ரேகை கண்டத்தின் நடுமத்தியில் செல்வதை கவனியுங்கள். ஆகையால் கண்டத்தின் வடபாகம் உஷ்ணப் பிரதேசம் தென்பாகம் வெது வெதுப்பான சமசீதோஷ்ணப் பிரதேசம். கண்டத்தின் மத்திய பாகத்தில் சீதோஷ்ண ஸ்திதியின் சம தன்மை கிடையாது. ஏனெனில் சுற்றிலுமுள்ள மலை விளிம்புகள் கடற்காற்றை உள்செல்ல விடுகிறதில்லை. ஆஸ்திரேலியாவின் வடக்கிலும், வடகிழக்கிலும் வருஷத்தில் எப்போதும் மழை பெய்கிறது. இங்கே பனை, மூங்கில், வாழை முதலியவை வளருகின்றன. தென் கிழக்கில் யூக்காலிப்டஸ் (தலைவலித் தைலம்) மரங்களும், பலவகை பிசின் மரங்களும் வளருகின்றன. பீடபூமிப் பிரதேசத்தில் புல் வளர்கிறது. தென்பாகத்திலும், கிழக்குக் கரையிலும், கோதுமை, சோளம், கிச்சிலி, ஆப்பிள் முதலியவை பயிராகின்றன.

சில பொதுவிஷயங்கள். ஆஸ்ட்ரேலியாவில் தங்கம், வெள்ளி, செம்பு, நிலக்கரி, இரும்பு, தகரம் முதலியவை அகப்படுகின்றன. ஜனங்கள் பெரும்பாலும் காடுகளில் மரங்கள் வெட்டியும், எண்ணை இரக்கியும், இன்னும் மீன் பிடித்தும், ஆடுமாடு மேய்த்தும் விவசாயம் செய்தும், சுரங்கம் வெட்டியும் ஜீவனம் செய்கிறார்கள். சிலர் தொழிற்சாலைகளில் செயற்கைப் பொருள் செய்தும் வேலை செய்து வருகின்றனர். பீடபூமியின் ஓரத்திலுள்ள புல்வெளிகளில் மந்தை மந்தையாக ஆடுகள் மேய்த்து வருகிறார்கள். இக்கண்டத்தின் பிராணிகளும், தாவரவர்க்கங்களும் நூதனமானவை. இங்குள்ள பிராணிகளும் தாவரங்களும் வேறெங்குமில்லை. இவைகளில் ஒன்று கங்காரு. இது 5 அடி நீளமுள்ளது. இதன் பின்கால்கள் நீளமுள்ளவை ; இவைகளைக்கொண்டு தத்தித் தத்தி ஓடும். இதன் வயிற்றில் ஒரு குழி இருக்கிறது. இதில் இதன் குட்டியை தூக்கிச் செல்லும், ஒப்போஸ்ஸம் என்று இன்னொரு பிராணியும் இங்கு இருக்கிறது. அதன் அலகும், கால்களும் வாத்தைப் போன்றவை. ஆனால் பார்த்தாலோ நாலுகால் மிருகம். இக்கண்டத்தில் போக்கு வரவு சாதனங்கள் மிகக் குறைவு. ஆஸ்ட்ரேலியாவின் பூர்வீக மனுஷர் மனுஷ பக்ஷிணிகள். ஆனால் இப்போதோ கண்டமுழுவதும் ஆங்கிலேயர் வந்து குடியேறிவிட்டனர்.

## 5. அமெரிக்காக் கண்டங்கள்.

பூகோள படத்தில் மேற்கு கோளார்த்தத்தைப் பாருங்கள். அதிலுள்ள கண்டங்கள் இரண்டு. அவைகளுக்கு அமெரிக்கா என்று பெயர். வடக்கிலுள்ளதற்கு வட அமெரிக்கா வென்றும், தெற்கிலிருப்பதற்கு தென் அமெரிக்கா வென்றும் சொல்லுவர். இவை இரண்டும் இயற்கையமைப்பில் ஒத்திருக்கின்றன. பனாமா என்ற பூசந்தியால் சேர்க்கப்பட்டு ஒரு நிலப்பகுதியாயிருக்கின்றன. இவைகளை கண்டுபிடித்தவர் கொலம்பஸ் என்பவர், இவைகளை சமீப

காலத்தில் தான் பழைய உலகினருக்குத் தெரிந்தமையால் அவை களை புதிய உலகம் என்று சொல்லுவார்கள். இக்கண்டங்களின் சுதேசிகளுக்கு சிவப்பு இந்தியர் என்று பெயர் (Red Indians). இப்போது தென் அமெரிக்காவில் ஸ்பானியரும் வட அமெரிக்காவில் ஐரோப்பியரும் குடியேறியிருக்கின்றனர்.

வட அமெரிக்காவின் வடபாகத்திலிருக்கும் கனடா பிரிட்டிஷ் ராஜ்யத்தை சேர்ந்தது. தென் பகுதி அமெரிக்கா ஐக்யநாடுகளென் றும் பெயருடன் ஓர் குடியரசு நாடாகி விட்டது. இந்நாடுகளுக் குள்ள செல்வத்தைப்போல் வேறெந்த தேசத்துக்குமில்லை. இங்கே நிலக்கரியும் இரும்பும் அகப்படுகிறதினால் தொழிற்சாலை அபிவிர்த்தி அதிகம். இங்கு புல்வெளி பிரதேசமும் அதிகமிருப்பதால் ஆடுமாடுகளின் விருத்தியதிகம். இங்கே போக்குவரவு மார்க்கங் களும் அதிகமாயுள்ளன.

**கடற்கரை இலக்ஷணம்.** வட அமெரிக்காவின் வடகரை அதிக மாய் பிளவுபட்டிருக்கிறது. அங்கே அநேக தீவுகளிருக்கின்றன. அதற்கு ஆர்க்டிக் தீவுக்கூட்டம் என்று பெயர். தென் அமெரிக்கா வின் கரையோரம் ஒழுங்காகயிருக்கிறது. (ஆப்பிரிகாவுடன் ஒப் பிடவும்).

**இயற்கை யமைப்பு.** இருகண்டத்திலும் மேல் பகுதியில் மேட்டு நிலமும், கீழ்பக்கத்தில் இன்னுமொரு மேட்டு நிலமும் இவைகளுக்கு நடுவில் அகன்ற சமவெளிகளும் காணப்படுகின்றன. வட அமெரிக்காவில் மேற்கேயுள்ள பர்வதத்திற்கு ராக்கிபர்வத மென்றும், கிழக்கிலுள்ளதற்கு "அப்பலேச்சியன்" என்றும் பெயர். தென் அமெரிக்காவின் மேற்கேயுள்ள பர்வதத்திற்கு "ஆண்டிஸ்" என்று பெயர்.

## நதிகளும் ஏரிகளும்.

வட அமெரிக்காவில் மேகன்ஸி, ஸிண்ட்லாரன்ஸ், மிஸிஸிபி என்ற நதிகள் முக்கியமானவை. இவைகளில் பெரியது மிஸிஸிபி. இது உலகத்தின் நதிகளில் அதிக நீளமுள்ளது (4300 மைல்). ஸெண்ட்லாரன்ஸ் நதியில் உலகப்பிரசித்திப்பெற்ற "நியாகரா" நீர்வீழ்ச்சியிருக்கிறது. தென் அமெரிக்காவிலுள்ள அமெஜான் நதி உலகத்தின் நதிகளில் அகன்றது. முகத்துவாரத்தில் இதின் அகலம் 50 மைல் இதைத் தவிர இன்னும் பல நதிகளுமிருக் கின்றன.

வட அமெரிக்காவின் வடபகுதியில் அநேக பெரிய ஏரிக ளிருக்கின்றன. இவைகள் போக்குவரவு மார்க்கங்களுக்கு அதிக பிரயோஜனமானவை.

## சீதோஷ்ண ஸ்திதியும், விளையும் பொருள்களும்.

வட அமெரிக்காவின் வடக்கில் துந்தரப் பிரதேச அருகில் பொதுவில் கனடாவுக்கு குளிர்ச்சியான சீதோஷ்ணமிருக்கிறது. அமெரிக்காவின் மேற்குக் கரையில் சீதோஷ்ணம் சம தன்மையுடையது. மத்திய பாகமும் கீழ்ப்பாகமும் மேற் கரையைவிட கோடையில் அதிக உஷ்ணமாயும், குளிர்காலத்தில் அதிக குளிர்ச்சியாயுமிருக்கின்றன. துந்தரப் பிரதேசத்திற்குத் தெற்கில் ஊசி இலைக்காடுகளிருக்கின்றன. இதற்குத் தெற்கில் கோதுமை பயிராகிறது. கோதுமை விளைகிற தேசங்களில் அமெரிக்கா முதன்மை பெற்றது. தென் கிழக்கு பாகத்தில் புகையிலை, சோளம், கரும்பு முதலியவை பயிராக்குகிறார்கள். மேட்டுப் பிரதேசங்களில் புல் ஏராளமாக விளைகின்றது.

மத்திய அமெரிக்கா நாடுகள் ஓர் பீடபூமிப் பிரதேசம். இங்கே அடர்ந்த காடுகளிருக்கின்றன. காப்பி, கரும்பு, வாழை இவைகள் ஏராளமாக விளைகிறது.

தென் அமெரிக்காவில் அமெசான் நதி கரையோரத்தில் உஷ்ணப்பிரதேசத்து காடுகள் அடர்ந்திருக்கின்றன. மலைச் சரிவுகளில் காப்பியும், சமவெளியில் கரும்பும் விசேஷமான பயிர்கள்.

**சில பொது விஷயங்கள்.**-இக்கண்டங்களில் மண்ணெண்ணெய், தங்கம், செம்பு கிடைக்கின்றன. ஜனங்கள் விவசாயத்திலும், பிராணிகள் விருத்தி செய்வதிலும், சுரங்க வேலையிலும், செயற்கைப் பொருள் உற்பத்தியிலும் ஜீவனம்சம் செய்து வருகிறார்கள். இக்கண்டங்களிலுள்ளார் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள்.

இப்போது பூகோளத்தையும், அதிலுள்ள கண்டங்களையும் சுருக்கமாகப் படித்தோம். இப் பூ உலகின் விநோதம் நமது அறிவுக்கெட்டாததாயிருக்கிறது. இன்னும் கண்டுபிடிக்கப்படாத கண்டங்கள் இருப்பினும் இருக்கலாம். நாமிருக்கும் இவ்வுலக மட்டுமல்ல, இன்னும் பல உலகங்கள் இருக்கின்றன. அவை நம் உலகிலும் பெரியன. இவைகளே இவ்வளவு பெரிதாயிருப்பின் இவைகளையெல்லாம் படைத்து, காத்து, பராமரித்து வருகிற இறைவன் எப்படிப்பட்டவரா யிருத்தல்வேண்டும். இந்த அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனும், ஆதி மூர்த்தியாயு மிருப்பவரை பய பக்தியுடன் தொழுது அவரை வழிபட்டு நடப்போமாக.

Artisan & Co., Mount Road, Madras.

இறைவன் துணை.

கௌமாரதருதலக்
கல்விப்பிரசுரம் 1.

தேசசரித்திரம் 4.

# இந்தியா தேசசரித்திரம்

ஆசிரியர்:—எஸ். வைத்திநாத ஐயர் பி. ஏ, எல். டி.
தலைமை உபாத்தியாயர், தேசீய உயர்தரப்பாடசாலை, மன்னார்குடி.

சரித்திரம் என்றால் தற்காலத்திற்கு முந்தியுள்ள ஜனங்களின் வாழ்க்கை, மனோபாவம் முதலியவைகளின் ஆராய்ச்சியே யாகும். இதில் மதசம்பந்தமானவைகளையும் கல்விச்சம்பந்தங்களையும் இராஜரீயமானவைகளையும் ஜனசமூகவாழ்க்கைவிஷயங்களையும் ஆராய்ந்து பார்க்கலாம். இந்த உபந்நியாசத்தில் இராஜரீயமான வாழ்க்கைகளைப்பற்றியே ஆராய்வோம்.

இந்தியா, என்னும் பெயரானது "ஸிந்து" என்னும் ஸமஸ்கிருத வார்த்தையிலிருந்து வந்தது எனலாகும். ஆரியர்கள் முதல் முதல் இந்தப் பரதநாட்டுக்குத் தென்மேற்கு மூலையிலிருந்து பிரவேசிக்கும்போது, அங்கே இருந்த நதி பெரிய சமுத்திரம் போன்று விசாலமாயிருப்பதைக் கண்டு அதற்கு ஸிந்து நதி என்று பெயரிட்டார்கள். அதிலிருந்து கிரமமாக இந்தத் தேசத்திற்கு இந்தியா என்ற பெயர் வந்தது.

சரித்திரகாலம். இந்தத்தேசமானது அநாதியாய் வெகுகாலம் தொடங்கி அனேகநாகரீகங்கள் ஓங்கப் பெற்ற "லெமூரியா" முதலான கண்டங்களில் சம்பந்தப்பட்டிருந்து, அந்தந்தக் கண்டங்கள் தோன்றி மறைந்தபோதிலும், அந்த நாகரீகங்களின் ஸாராம்சங்களையெல்லாம் அடக்கிக்கொண்டதாய், அந்தச்சம்பந்தத்தைவிடாது மேல் மேல் அபிவிருத்தியாகிக் கொண்டு அகஸ்திய மகாமுனி முதலியருஷிகளாலேயும் போஷிக்கப்பட்டும் விளங்கி வருகிறதானபடியால் சரித்திர ஆரம்பம் செய்யப்படுகாலம் பண்டைய காலத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கும். இதுவரையில் ஒருவிதமாக எழுதப்பட்டிருக்கிற சரித்திரங்கள் சுமார் சென்ற 2500-வருஷங்களுக்கு எழுதப்பட்டுள்ளன.

பூர்வீகர்கள். இந்தியதேசத்தின் பழையகுடிகள் இப்போது அந்தமான் தீவிலுள்ள. "நீக்ரேயரைப்" போலுள்ளவர்கள் என்று சிலர் அபிப்பிராயம். மற்ற சிலர் திராவிடர்கள் என்றுசொல்லுகிறார்கள்.

இந்தியராஜ்யத்தின் எல்லைகள் வடக்கே இமயமலை முதல் தெற்கே கன்யாகுமரிவரையிலும், மேற்கே பம்பாய்முதல் கல்கத்தா வங்காளக்குடாக்கடல் வரையிலுமுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் 35 கோடி ஜனங்கள் (சுமார் பூமியின் கண்ணுள்ள ஜனத்தொகையில் 5-ல் ஒருபங்கு) சங்கியையோடு, 182 வெவ்வேறான ஜாதியார்களாலும், 149 வித பாஷைகளுடையவர்களாலும் அடங்கப்பெற்றாலும் ஒரே பரதநாடு என்ற பெயருடனும் இந்தியா என்றும் வழங்கப்பட்டுவருகிறது.

இதன் சரித்திரத்தை 3 காலப்பிரிவுகளாகப்பிரித்துக் கவனிப்போம்.

(1) பூர்வீக இந்தியர்களின் காலம். பண்டையகாலம் முதல் 1200 கி. பி. வரையில்.

(2) மத்திய காலம்; முஸ்லிம் காலம். 1200 கி. பி —1800 கி. பி.

(3) நவீன காலம்; பிரிட்டிஷ் அரசாங்க காலம். 800 கி. பி.—1932.

இந்தப் பிரிவுகளெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டு; ஒன்றன் பிரயோசனத்தை தொடர்ச்சியாகக் கையாண்டுகொண்டே போகிறதென்றே கொள்ளற்பாலது.

பூர்வீக இந்தியகாலம் பண்டையகாலமுதல் 1200—கி. பி. வரை இதிற்கண்ட பிரிவுகள்.

(1) பண்டைத் தமிழர்காலம். இப்போதுள்ள மதுரை, திருநெல்வேலி, இலங்கை முதலிய நாடுகளுக்குத் தெற்கும் கிழக்குமாக இருந்து கடல்கொள்ளப்பட்ட நாட்டில்வாழ்ந்தவர் ஆதி பண்டைத் தமிழர். இவர்களைப்பற்றி பண்டைத்தமிழ்நாடு என்றதில் பார்க்க.

(2) வேதகாலம். ஆரியர்கள் வடமேற்கிலிருந்து கிரமமாக இந்துதேசத்தில் வியாபித்த காலந்தொடங்கி மூன்று வேதங்களும், ராமாயண மகாபாரத முதலான இதிஹாஸங்கள் ஆதாரமாகக் கொண்டு நடந்தேறியகாலம் 3000 கி. மு.—1000 கி. மு.

(3) மதக்கிளர்ச்சிகாலம். பௌத்த ஜயினமதங்கள் தோன்றிய காலம் 1000 கி. மு.—320கி. பி. இதில் மௌரிய ராஜவம்சம் முதலானவை விளங்கப்பெற்றது.

(4) பௌராணிக காலம். 320 கி. பி.—650 கி. பி. இந்தக் காலத்தில் குப்த ஹர்ஷ வர்த்தன முதலான ராஜ்பங்களோங்கின.

(5) ராஜபுத்ரவம்ச காலம். 650 கி. பி.—1200 கி. பி. எற்கனவே சரித்திரக்காரர்களால் எழுதிவைக்கப் பட்டுள்ளது.

## மதக்கிளர்ச்சி காலம்.

600 கி. மு.விலிருந்து ஆரம்பிக்கிறது.

(1) சைசுனைகவம்சம் 600 கி. மு.—370 கி. மு. அதில் பிம்பிசாரா அஜாதசத்ரு முதலியவர்கள் முக்கிய அரசர்கள். அஜாதசத்ரு என்ற அரசன் தன் தகப்பனாகிய பிம்பிசாரா என்பவனைக் கொன்

ஜுன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்காலத்திலேதான், பௌத்தமதஸ்தாபகரான புத்தபகவானும் ஜயினமத ஸ்தாபகரான மஹாவீரர் என்பவரும் விளங்கினார்கள்.

(2) பிறகு நந்தவம்சம் 370—கி. மு. 322 கி. மு. வரையில்.

இக்காலத்தில்தான் அலெக்சாண்டர் என்ற பெரியபோர்வீரர் கிரீக்தேசத்திலிருந்து இந்தியாவின்மேல் படை எடுத்தனர். கி. மு. 326-ல் ஜீலம் ஆற்றுக்கரையில் புருரவச் சக்கிரவர்த்திக்கும் அலெக்சாண்டருக்கும் சண்டை நடந்தது. $6\frac{1}{2}$-அடி உயரமுள்ள புருரவச் சக்கிரவர்த்தி யானைமீது இருந்து புறங்கொடாமல் சண்டை செய்ததை அலெக்சாண்டர் ஆச்சரியப்பட்டுப்பார்த்து அவரைக் கொல்லாதபடி கைதி செய்து உன்னை என்ன செய்யவேண்டுமெனக் கேட்டார். "ராஜனாகவே" என்றார். அலெக்சாண்டர் அவர் தைரியத்தை மெச்சி இராஜ்ஜியத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

(3) பிறகு மோரிய வம்சம்; இதில் முக்கிய அரசர்கள் சந்திரகுப்தர், அசோகர் முதலிய பெரியோர்கள். இவர்களில் சந்திரகுப்தர் தான் இந்தியா விசாலமான தென்றும் ராஜ்யத்தை விஸ்தரித்து ஸ்தாபிக்க இடமுள்ளதென்றும் அறிந்தார். அசோகர் 272 கி. மு.—231 கி. மு. வரையில் ஆண்டார். இவர் மஹா பெரியவரென்றும், உலகிலுள்ள அநேக பேரரசர்களிலொருவரென்றும் பெயர் வாங்கினவர். இவர்சமாதானமும், பொறுமையும் கைப்பற்றி மனோபரிபக்குவக் கொள்கைகளால், மனிதர்களின் ஹிருதயத்தைக் கவரவேண்டுமென்கிற ஆசையுடையவராயும் தன்குடிகளின் முன்னேற்றத்தை அபிவிருத்திசெய்வதற்கென்றே தன் காலத்தையும் சக்தியையும் பூராவாக உபயோகித்தவர். மற்றும் உலகமெங்கும் அநாகரீகம் குடிகொண்டிருந்தஅந்த கி. மு. மூன்றுவதுநூற்றாண்டிலேயே இப்படிப்பட்ட அரசியல் இந்தியாவில் இருந்ததென்றால் இந்தியநிலை எவ்வளவு உயர்ந்ததென்பது ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. அசோகரின் சிலா சாசனங்களில் தர்மம் என்றால் தயை, தானம், சத்தியம் சுத்தம் முதலானவைகள் வெகுஜனமுயற்சியாக இருக்கவேண்டுமென்றும்பிரசுரப்படுத்தியிருக்கின்றனர். இவர்அர்த்தசாஸ்திரத்தைகைப்பிடித்தவர். "பிரஜைகளின்ஆனந்தமே அரசனுடைய ஆனந்தம். பிரஜைகளின் க்ஷேமமேஅரசனின் க்ஷேமம். தனக்கு நல்லது என்பதால் மாத்திரமே பிரஜைகளுக்கு க்ஷேமமாகக் கொள்ளக்கூடாது; பிரஜைகளால் சந்தோஷகர மென்று கருதப்படுபவைகளே நன்மையென்று கருதப்பட வேண்டும்" என்பது அர்த்த சாஸ்திரக் கொள்கைகள். இதைக்காட்டிலும் மேலான அரசியல் வேறில்லை. அந்த அசோகர் எல்லோராலும் பெரியோர் என்று புகழப்பட்டவர். ஆனதால் அப்பேர்ப்பட்ட அரசனை அடையப்பெற்ற இந்தியதேசம் மிகவும் சிறப்புற்றதென்றதற்கும் ஐயமுண்டோ!

(4–5) சுங்க வம்சம், கண்வ வம்சம் 28 கி.மு. முதல் தோன்றி விளங்கிப் பிறகு மறைந்தன.

## பௌராணிக காலம்.

(1) குப்த வம்சம் 320 கி. பி.—480 கி. பி. இந்த வம்சத்தில் முக்கியர்கள் சமுத்திரகுப்தர், சந்திரகுப்தர் முதலானோர்கள். மஹா ஹர்ஷவர்த்தனர்என்பவர் 606 கி. பி. முதல் 647 கி. பி. யில், சம்ஸ்கிருத பாஷாபிமானியாயும் அசோகருக்கு சமானமானவராகவும் விளங்கினார்.

## ராஜபுத்திர வம்ச காலம்.

பிறகு ராஜபுத்திரர்கள் தோன்றி அபிவிருத்தியாகி 1200 கி. பி. வரையில் அரசாட்சி செய்தார்கள். ராஜபுத்திரர்கள் போர்வீரர்களாயும், போரில்ஆவலுள்ளவர்களாயும், பரம்பரை மேன்மையுடையவர்களாயும் இருந்தனர். தைரியமுடையவர்களாயும் தங்களுடைய தலைவரிடம் பூரண பக்தியுடையவர்களாயும், பயமற்றவர்களாயும் இந்தியாவில் தைரியம் பூத்ததுபோல் விளங்கினார்கள். ஐரோப்பியர்களால் சொல்லப்பட்ட கதைகளிலிருந்தே ராஜபுத்ர வம்சத்தவர்களின் மேன்மைகள் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இவர்களின் எதிரில் ஐரோப்பியர்களின் தீரத்துவம் எதிர்நிற்கமுடியாது என்று சொல்லலாம். ஜயசந்திரன், பிருத்விராஜன், சம்யுக்தை முதலியோர்களின் கதை யாவருக்கும் தெரிந்த விஷயமே.

## சேர சோழ பாண்டிய பல்லவ ராஜ்யம்.

தென்னிந்தியாவில் மேல்கண்ட அரசர்கள் பாரம்பரையாக அரசாட்சி செய்து வந்தனர்.

சோழமண்டலம் வடக்கே நெல்லூர் முதல் தெற்கே புதுக்கோட்டை வரையிலுள்ளது. திருச்சி உறையூர் என்னுமிடம் சோழர்களின் பிரதானஸ்தலம். இவர்கள் பழையவர்களென்று மகா பாரதத்தில்கூட இவர்கள் பெயர் காணக் கிடக்கின்றன. கரிகால் சோழன்என்று கியாதிபெற்ற பெரியோன் 50 கி. பி.—95 கி. பி. யில் அரசாண்டான். சோழர்களில் 7 பெரிய அரசர்கள் உளர். ராஜ ராஜப்பெரியோன் 985 கி. பி.—1013 கி. பி. ராஜ்யபார நிபுணனும், வீரனும் விளங்கி இந்தியாவில் அநேக பாகம் ஜெயித்தான். முதல் ராஜேந்திரன், ராஜாதிராஜன், இரண்டாவது ராஜேந்திரன், மூன்றாவது ராஜேந்திரன் முதலானோர் முக்கிய சோழ அரசர்கள். இந்தச் சோழர்கள் காலத்தில் உள்நாட்டு சுய அரசாக்ஷிக்கு முக்கியாம்சமான 'கிராமப் பஞ்சாயத்து' அரசாக்ஷிக்கு அடிப்படையாகக் கையாளப்பட்டது.

மதுரை திருநெல்வேலியில் பாண்டியர்களும், தற்காலத்தில் கேரளம், மலையாளம், என்று வழங்கப்பெறுகிறவிடத்தில் சேரர்களும் ஆண்டுவந்தார்கள்.

இந்த அரசர்களுக்குள் கோவில் வெண்ணி என்னுமிடத்தில் மஹாயுத்தம் நடந்ததாகத் தெரிகிறது. மஹாபாரத யுத்தகாலத்தில் இந்த அரசர்களால் இருபடையாருக்கும் உணவு அளிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இவர்களைப்பற்றி தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதை கவனிக்கவும்.

### முஸல்மான் ராஜ்யம்.

பிறகு முகம்மதியர்கள் வடமேற்கிலிருந்து பிரவேசித்த காலந் தொடங்குகிறது. கஜினி மஹம்மது, கோரி மஹம்மது முதலானோர்கள் இந்தியாவில் படை எடுத்து வந்தார்கள். 13-வது நூற்றாண்டு முதல் 14-வது நூற்றாண்டு வரையில் சுல்தானியா ராஜ்யம் டில்லியில் நடைபெற்றது. இந்த சுல்தான்களில் குட்புடீன், அல்டாமஸ், பால்பன், அல்லாவுடீன், கில்ஜி முஹம்மதுடோக்ளக், கயாசுடீன் டோக்ளக் முதலானோர்களும், சுல்தானாராஜியா என்ற ராணியும் அரசாண்டார்கள். டில்லியில் இவள் ஒருவள்தான் பெண் அரசியல் நடத்தியவள். இவளால் பெண்பாலர்களுக்கும், இந்தியர்களுக்கும் கௌரவம் உயர்ந்தது.

### முஹலாயர் காலம்.

526 கி. பி.—1077 கி. பி. பேபர், ஹுமாயூன், அக்பர், ஜகாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் முதலியவர்கள் முக்கிய அரசர்கள். இவர்களில் "அக்பர்" பெரியவர், இங்கிலாந்தில் எலிசபெத் ராணியின் அரசாங்க காலத்தில் இங்கு அரசு செலுத்தியவர் இவர். தன்னுடைய ராஜ்ய நிபுணத்துவத்தினாலும், அனுபவ ஞானத்தினாலும், புத்திகூர்மையினாலும் எல்லாரையும் தன்வசமாக்கிக்கொண்டார். பின்பு முஸல்மான் முதலிய எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு, அன்புடனும் மரியாதையுடனும் பாராட்டப்பெற்றார். இவர் சர்வமத ஐக்கியத்தை வளர்க்கமுயன்றார். பலமதங்களிலுள்ள பெண்களை மணம் செய்தார். இவருக்குப் பிறகு கிரமமாக அவுரங்கசீபு வரையில் வந்த அந்த வம்சம் க்ஷீணமடைந்தது. டாஜ்மகால் என்று உலகம் எங்கும் பெயர்பெற்ற சலவைக்கல்லால் கட்டப்பட்ட கோரியும், அநேக கோட்டைகளும் இவர்கள் காலத்தில்தான் வடநாட்டில் கட்டப்பட்டன.

### மகாராஷ்டிரர்கள் காலம்.

இக்காலத்தில் மகாராஷ்டிரர்களும், சீக்கர்களும் பெருகிக் கொண்டு வந்தார்கள். சிவாஜிமகாராஜாவின்கீழ் மகாராஷ்டிர வம்

சம் ஓங்கியது. 17-வது நூற்றுண்டில் தனது சுயவலிமையாலேயே அவர் ராஜ்யத்தை ஸ்தாபித்தார். 100-வருஷம் வரையில் அந்த ராஜ்யம் வழங்கியது. அவருடைய காலத்திலுள்ள பெருமைகளை முற்காலங்களில் வெளிப்படுத்தா விட்டாலும், இக்காலத்தில் அவருடைய மகிமை நமக்கு விளக்கி காட்டப்படுகின்றது, அதிலிருந்து அநேகர் ஊக்கத்தை அடைகிறுர்கள். இவருக்குப் பின் சாம்பாஜியும், ராஜா சாகிப்பும், தாராபாய் என்கிற பெண்மணியும் அரசு செலுத்தினுர்கள். பிறகு பேஷ்கார்கள் என்ற பெரிய மந்திரிகளாயிருந்தவர்கள் அரசு செலுத்தினுர்கள். 1761-க்குப் பிறகு ஆப்கானியர்களால் தோல்விபெற்று அந்த வம்சம் அடங்கியது.

## பிரிட்டிஷ் அரசாங்கம்.

பிறகு இந்தியாவில் வியாபாரம்செய்து லாபம் அடையக்கோரி ஐரோப்பியர்களாகிற போர்ச்சுகீயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர்கள், பிராஞ்சுக்காரர்கள் முதலியவர்கள் தோன்றினுர்கள். வியாபார அபிவிருத்திக்காகத் தங்கினுர்கள். வியாபாரஸ்தலங்களை தொழிற் பிரதேசங்களாகவும். தொழிற் பிரதேசங்களை நகரங்களாகவும் மாற்றிக் கொண்டு பெருகி வரவர சுவதேச சிற்றரசர்களின் விவகாரங்களில் உட்புகுந்து, அதன்மூலமாகச் சிலப்பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டு, தங்கள் ராஜாங்கத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் போர்ச்சுகீஸாரும், டச்சுக்காரரும் பின்னடையவே, பாக்கியிருக்கும் பிரஞ்சுக்காரர்கள் வெகு கஷ்டத்தின் மேல் ஆங்கிலேயரால் வெளியேற்றப்பட்டார்கள். 1639-ம் வருஷத்தில் சந்திரகிரி அரசனிடம் கிரயத்திற்கு வாங்கிப்பெற்ற பிரதேசத்தில் சென்னைமாநகரம் ஸ்தாபிக்கப்பெற்றது. பிறகு கிரமக்கிரமமாக கல்கத்தா பம்பாய் முதலிய முக்கிய ஸ்தலங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். சில நிற்பந்தங்களின் காரணமாக 1857-ம் வருஷத்தில் பெரிய கலகம் "சிப்பாய் கலகம்" நடந்தது. அதை சிற்றரசர்களின்சஹாயத்தால் ஆங்கிலேயர்கள் அடக்கி, 1858-ம் வருஷத்தில் விக்டோரியா மஹாராணியால் "இராணியின் பேரிகை" என்ற மஹாசாஸனம் அளிக்கப்பட்டு, பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் மேல் விசாரணை அதிகாரம் முதலானவை ஏற்பட்டன.

இந்திய சிற்றரசர்களுக்குள் குழப்பமும், கலகமும், ஒற்றுமையின்மையும் ஆங்கிலேயப் பெருக்குக்கு சாதகமாயிருந்தது. பிறகு கிளைவ் வாரன்ஹேஸ்டிங்கிஸ் முதலானவர்களின் திறமை பயன்பட்டது. கார்ன்வாலிஸ் பிறகு மார்க்குவிஸ் வெல்லஸ்லி மார்க்குவிஸ்ஹேஸ்டிங்கீஸ் முதலியோர் காலத்தில் அநேக ருஜ்யங்கள் பிரிட்டிஷ் ருஜ்யத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. வில்லியம் பெண்டிங்கிங் முதலிய சில யோசனைக்காரர்களால் கவர்னர்ஜனரல்

கள் காலத்தில் சதி சிசுபலி முதலான சில துர்நடத்தைகள் தடுக்கப்பட்டன. கொஞ்சம் கல்வி கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டன. ஆங்கில அரசாட்சி பஞ்சாபு, ஆப்கானியஸ்தான் முதலிய இடங்களுக்குப் பரவவும், சீக்கியர்களுடனும், ஆப்கானிஸ் தானியர்களுடனும் சண்டைகள் ஏற்பட்டன.

டல்ஹௌஸி (1848–1884 கி-பி.) கவர்னர் ஜனரலாக இருந்த காலம் அவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தில் நம்பிக்கை ஏற்பட்டு, அதன் மூலமாய் சிற்றரசர்களின் ராஜ்யங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1858-ம் வருஷத்திற்குப் பிறகு வைஸ்ராய்கள் அநேகர் வந்து ராஜாங்கத்தை நடத்தினார்கள். அவர்களில் லார்டுரிப்பன் காலத்தில் உள்நாட்டுச் ஸ்வதேச அரசாக்ஷி சட்டம் எற்பட்டது. பின் பல சீர்திருத்தங்கள் நடந்தன. லார்டுகர்சான் காலத்தில் கூட்டுறவுச்சங்க ஆக்டு ஏற்படுத்தப்பட்டது. தற்காலத்தில் 'நிஜ கிருஸ்தவ வைஸ்ராய்' என்ற பெயர் பெற்ற லார்டு இர்வின் அவர்கள் இந்திய ஸ்வய அரசாக்ஷிக்கு வேண்டி சில சாதனங்களைவழங்கினார். இப்போது லார்ட் வில்லிங்டன் பிரபு வைஸ்ராயாக இருக்கிறார்.

இக்காலம் ஆங்கிலப்படிப்பின் பயனாலும், ஆங்கிலேயர்களுடன் பழகியதாலும் அயல் நாட்டாரின் நாகரிகம் ஒழுக்கம் இவைகளின் சேர்க்கையாலும் இந்திய தேச ஆக்ஷியில் இன்னும் உரிமை பெற வேண்டுமென்றும், ஸ்வயராஜ்யம் பெற வேண்டும், பிரஜைகள் மற்ற தேசத்தவர்போலவே ஸ்வதந்தரர்களாக ஆகவேண்டு மென்ற ஆசையும் கிளர்ச்சியும் நமது தேசத்தில் படித்த பெரியோர்கள் துவாராவாக தேசமுழுதும் ஏற்பட்டிருக்கிறது.

1885-ம் வருஷத்தில் இந்தியதேசகாங்கிரஸ் மகாசபை இந்தியர்களின் க்ஷேமத்தைக்கோரி ஏற்படுத்தப் பெற்றது. மகான்களாகிற தாதாபாய் நவுரோஜி, ஸர். பி. எம் மீடா, ஸர். சுரேந்திரநாத் பனர்ஜி, பாலகங்காதர டிலக், கோபாலகிருஷ்ண கோகேல், ஜி. சுப்பிரமணிய அய்யர், அன்னி வஸந்தா அம்மையார், மஹாத்மா காந்தி முதலானோர்கள் தலைமை நடத்தி வந்தார்கள். இந்த நிலைமையில் அந்தரங்க மனோபேதங்களால் வேறுபாடுகள் ஏற்பட்டு தீவிரர்களென்றும், மத்தியஸ்தர்க ளென்றும் பாகுபாடுண்டாகி, ஒற்றுமையில்லாமல் அநேக மேடை வாதங்கள் ஏற்பட்டு, பலகக்ஷியார்களுமாகச் சேர்ந்து லண்டன் நகரில் வட்டமேஜை மகாநாடு கூடி, இரண்டு வருஷங்களாக பரியாலோசனைகள் நடக்துகொண்டு வருகின்றன.

அதிசீக்கிரத்தில் பிரிட்டிஷ் ராஜாவுடன் ஒத்துழைக்கும் இந்திய குடியரசுச் சட்டம் ஏற்பட்டு பிரஜைகள் க்ஷேமமாக வாழும் சாதனம் ஏற்படுமென்று பல தேசத்தாரின் அன்பு விளக்கம் உலவுகின்றது. இந்த சம்பவங்கள் எல்லாம் இந்தச் சரித்திர மூலமாய்த்

தெரிந்துகொண்ட நாம் நம்முடைய வருங்கால குடியரசுத்தொண்டு செலுத்த உரிமை வாய்ந்தவர்களாக்கிக்கொண்டு ராஜீகத்தில் ஊடுருவி உலக க்ஷேமத்திற்கு இந்தியா தேசத்தின் குருஸ்தானத்தை மேற்கொண்டு ஸர்வலோக க்ஷேம காரியர்களாக ஆகவேண்டும்.

இங்குச் சில பெரியார்களின் வாக்கியங்கள் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டியது.

இமயமலைமுதல் கன்யாகுமரி வரையிலும், பங்காளம் முதல் பம்பாய் வரையிலும் விரிந்த இந்தியா உபகண்டமாயினும் ஏக ராஜ்யத்திற்கு குந்தகமில்லை. அதன் ஐக்கியத்திற்கு யாதொரு தடையுமில்லை, (பிரிட்டிஷ் ராஜ்ய பிரதான மந்திரி.)

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற லொன்று டையாள்—இவள்
செப்புமொழி பதினெட் டுடையாள், எனிற்
சிந்தனை யொன்று டையாள்.

பாரத சமுதாயம் வாழ்கவே—வாழ்க, வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே—ஜய ஜய ஜய (பா)

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கு ஒரு புதுமை. வாழ்க. (பா)

எல்லாரு மோர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க. (பா)

(சுப்பிரமணிய பாரதியார்.)

நாம் பலரானது பற்றியே எல்லோரும் ஒன்றே. நமது வேறுபாடுகளாலும் வித்தியாசங்களாலும், விசேஷ சகோதர பாவத்துக்கும், சர்வஜன சமரஸ ஜீவ்யத்திற்கும் ஸர்வஜன அன்புக்கும் விசேஷ இடம் கொடுத்திருக்கிறோம்.

பனியினால் மூடப்பட்டுள்ள வெவ்வேறு மலைச் சிகரங்கள் சூர்ய உதய வெளிச்ச கோளத்தில் ஸகலமும் ஒரே பர்வதத்தை ஆதாரமாகக் கொண்டதுபோல் நாம் எல்லோரும் ஒரே ஆதாரத்தையுடையோராகிறோம்.

(ரவிந்திரநாத் டாகூர்.)

---

ஸ்ரீ பிரஹத்சுந்தர குசாம்பிகா பிரஸ் திருவிடைமருதூர்.


ஆங்கிலநாடும்
அதை அடுத்த
ஐரோப்பிய நாடுகளும்.
மெயின் லாண்டு
ஷெட்லண்ட் தீவுகள்
ஆர்க்னி தீவுகள்
ராகமல்
டிப்பொஷிஷின்
அட்லாண்டிக்
மஹா
சமுத்திரம்
வட கடல்
பெரிய பிஷர் கூரை
நார்வே
டென்மார்க்கு
ஜட்லண்டு
ஹைலாண்ட்ஸ்
ஸ்காத்லந்து
ஐர்லாந்து
ஐரிஷ் கடல்
இங்கிலாந்து
லண்டன்
உலாந்து
பெல்ஜியம்
பாரிஸ்
வெர்ஸலீஸ்
சேனல் தீவுகள்
ஜெர்ஸி
நியூயார்க்கிலிருந்து
நியூயார்க்கிலிருந்து லிவர்பூலுக்கு 3047 மைல் 7 நாள்

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம். 1.

தேச சரித்திரம் 5.

# இங்கிலாந்து தேச சரித்திரம்.

ஆசிரியர்:— எ. ரெங்கசாமி அய்யர், பி. எ., பி. எல்.,
ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை.

1 இந்தியாவும் இங்கிலாந்தும்:— இங்கிலாந்து தேசம் என்பது ஐரோப்பா கண்டத்தில் வடமேற்கு பாகத்திலிருக்கிற ஒரு தீவின் தென்பாகம் நமது இந்தியாதேசம் ஆசியா கண்டத்தின் தென்பாகத்தில் இருக்கிறது. இரண்டு தேசங்களுக்கும் உள்ள தூரம் சுமார் 5000 மைல். ஆனால் இந்த இரண்டு தேசங்களும் சென்ற முந்நூறு வருஷங்களாகச் சம்பந்தப்பட்டு தற்காலத்தில் இந்தியா தேசமானது ஆங்கிலேயர்களின் ஆளுகைக்குள்ளிருந்து வருகின்றது. அதுகாரணம் பற்றி நாம் இங்கிலாந்து தேசத்தின் சரித்திரத்தை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமே.

2 ரோம ஆளுகை:— 504-ம் வருஷங்கள். இங்கிலாந்தில் நமக்குத் தெரிந்தமட்டில் முதலில் குடியிருந்தவர்கள் கெல்ட் ஜாதியார். அவர்களுடைய நாகரீகமானது ரோமர்கள், கிரேக்கர்கள், இந்துக்கள் முதலானவர்களுடைய நாகரீகம் அந்தக் காலத்திலிருந்ததுபோல ஓர் உயர்வுற்ற நாகரீகமல்ல. ஜூலியஸ் ஸீஸர் என்ற பெயர்பெற்ற ரோம தளகர்த்தர் கி. மு. 55, 54 ஆண்டுகளில் அந்தக்காலத்தில் பிரிட்டன் என்று பேர்விளங்கிய இங்கிலாந்து தேசத்தின்மேல் படையெடுத்துச் சென்று அதை ரோமபுரியின் ஆளுகைக்கு உள்ளாக்கினார். ரோமபுரியின் ஆளுகையானது கி. மு. 55 முதல் கி. பி. 449 ஆண்டு வரையில் அதாவது சுமார் 500 வருஷம் நீடித்திருந்தது. ரோம ஜாதியாரின் நாகரீகமானது கெலட் ஜாதியாருக்குள் பரவினது. கி.பி. மூன்றாவது நூற்றாண்டில் கிறிஸ்துவமதமானது பிரிட்டன் தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டு கெல்ட் ஜாதியாருக்குள் பரவ

**குறிப்பு:**— கி. மு. என்றால் கிறிஸ்து பிறக்குமுன், கி. பி. என்றால் கிறிஸ்து பிறந்தபின் என்று பொருள். I, II, III, IV, V. VI, VII, VIII, IX, X. இவை முறையே 1 முதல் 10 வரை உள்ள எண்களை குறிக்கும்; இவைகளுக்கு ரோமன் எண் என்று பெயர். இங்கிலாந்து தேச விபரங்களை பூகோளபடத்தில் காண்க.

ஆரம்பித்தது. ரோம நகரத்தை வெளிப்பிரதேசங்களிலுள்ள நாகரீகமற்ற காத்ஜாதியாரின் தலைவனான அலாரிக் என்பவன் கி. பி. 410ம் ஆண்டில் கைப்பற்றி கொள்ளையடித்தபிறகு ரோம ஜாதியார் அவர்களுடைய செல்வாக்கை இழந்தார்கள். பிரிட்டனில் அவர்களுடைய ஆளுகையும் பலங்குன்றி நசித்துப் போயிற்று.

3 ஸாக்ஸன் அரசர்கள்:— ரோம ஆளுகை விலகின பிறகு ஸாக்ஸன் ஜாதியார் கிழக்கேயிருந்து இங்கிலாந்து தேசத்தைப் படையெடுத்து கீழ்பாகங்களில் குடியேறினர். அவர்களில் பலவகுப்புகள் உண்டு. அவர்கள் எல்லோரையும் பொதுவாக ஆங்கிலேயர்கள் என்றும் அவர்கள் குடியேறின பிரிட்டன் தேசம் ஆங்கில தேசமென்றும் அது முதல் கூறப்பட்டது. அவர்கள் ஆங்கிலதேசமென்ற இங்கிலாந்து தேசத்தின் தென் பாகத்தை கி. பி. 449 முதல் 607-ம் ஆண்டுக்குள் கைப்பற்றினார்கள். அவர்களால் பல ராஜ்ஜியங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகள் ஒன்றுக்கொன்று இடைவிடாது போர்புரிந்து வந்தன. கி. பி. 7-ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த பல ராஜ்ஜியங்கள் 7 ராஜ்ஜியங்களாக வகுக்கப்பட்டன. கிறிஸ்துவமதமும் அந்தக்காலத்தில் ஆங்கிலர்களுக்குள் பரவ ஆரம்பித்தது. ஆங்கிலேயர்கள் கிறிஸ்துவ மதத்தை மேன் மேலும் தழுவி நிற்க அவர்களுக்குள் ஐக்கிய பாவமானது பலம்பெற்று எக்பெர்ட் என்ற ஒரு அரசன் கி. பி. 839-ம் ஆண்டில் இறப்பதற்கு சில வருஷங்களுக்கு முன்னமேயே மற்ற அரசர்களைச் சிற்றரசர்களாகச்செய்து தலைமையைப்பூண்டான். அவனுடைய சந்ததியார்கள் ஆங்கில தேசத்தின் அரசர்களாக கி. பி. 10-வது நூற்றாண்டுவரை ஆண்டார்கள். ஸாக்ஸன் ஜாதியாருக்குள் கடைசியாய் ஹரோல்டு என்பவன் கி. பி. 1066-ம் ஆண்டில் அரச சந்ததியைச் சேராத போதிலும் அரசனாக பிரபுக்கள் கூடின பார்லிமெண்டு போன்ற சபையில் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

4 நார்மன் வம்ச அரசர்கள் கி. பி. 1066–1154, 88-வருஷங்கள். வில்லியம் I ஆகிய நார்மண்டி என்ற ஓர் தென் தேசத்தின் அரசன் ஆங்கில தேசத்தை கி. பி. 1066-ம் ஆண்டில் படையெடுத்து ஹரோல்டு அரசனை வென்று ராஜ்ஜியத்தைக் கைப்பற்றினான். இவனும் இவனுடைய வம்சத்தார்களும் கி பி 1066 முதல் கி.பி. 1154 வருஷம் வரை ஆண்டுவந்தார்கள். ஸாக்சன் ஜாதியாருக்கும் அவர்களை ஜெயித்த நார்மன் ஜாதியாருக்கும் விரோதமானது நீடித்துவந்தது.

5 அன்ஜூ வம்ச அரசர்கள். கி. பி. 1154-1399, 245 வருஷங்கள். வில்லியம் I ன் குமாரனான ஹென்றி I ன் தௌஹித்திரன் ஹென்றி II என்பவன் அன்ஜூ ராஜ்ஜியத்தின் சிற்றரசனாயிருந்தான். அவன் கி. பி. 1154 ஆண்டில் ஆங்கில தேசத்தின் அரசனாயினான். இவன் வம்சத்தில் உதித்த ஒரு கொடுங்கோல் மன்னனாகிய யோவான் என்பவன் அரசனாயிருக்கும் பொழுது இங்கிலாந்து தேசத்தில் "மாக்னாகார்ட்டா" என்ற ஓர் பிரஜைகளின் உரிமையைப்பற்றிய மகா பத்திரமானது அரசனிடமிருந்து ஜனத்தலைவர்களால் கி பி 1215-ம் ஆண்டில் நிர்ப்பந்தத்தின்பேரில் வாங்கப்பட்டது. அந்த "மாக்னாகார்ட்டா" என்ற மகாபத்திரம் ஒவ்வொரு ஆங்கிலேயரின் சுவந்தரங்களுக்கு அடிப்படையாக விளங்குகின்றது. அதின் பிறகு ஆங்கில மன்னர்கள் தாங்கள் இஷ்டப்பிரகாரம் ஆண்டு வந்த முன் முறையை ஒழித்து ஸபை பிரதிநிதிகளின் சம்மதத்திற்கு உள்ளடங்கி ஆளத்தொடங்கினார்கள். அந்த மகா பத்திரப்பிரகாரம் அரசனுடைய அதிகாரங்கள் கட்டுப்பட்டன. அவன் ஜனத்தலைவர் சபையின் அங்கிகாரமின்றி ஒரு வரியும் விதிக்கக்கூடாது. எல்லா பிரஜைகளும், குற்றஞ் சாட்டப்பட்டால் சட்டப்பிரகாரமும் ஜூரிமார்களுடைய அபிப்பிராயப்பிரகாரமும் விசாரணையின்பேரில் தண்டனைக்குள்ளாவார்களே யொழிய, அரசன் அவன் இஷ்டப்பிரகாரம் அவர்களை தண்டிக்கக்கூடாது. வரவர ஸாக்ஸன் ஜாதியாரும் நார்மன் ஜாதியாரும் துவேஷத்தை ஒழித்து சிநேக பாவத்தைக் கைப்பற்றி ஒரு ஜாதியாராக கூடினார்கள். அவர்கள்தான் இப்போது இங்கிலீஷ்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தக் காலத்தில்தான் இங்கிலீஷ் பார்லிமெண்டானது ஆரம்பமாய் ஜனங்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய 'ஹவுஸ் ஆவ் காமன்ஸ்' என்ற சபையாகவும் பிரபுக்கள் சேர்ந்த 'ஹவுஸ் ஆவ் லார்ட்ஸ்' என்ற சபையாகவும் ஏற்பட்டது. 'காமன்ஸ்' சபையோரின் சம்மதமின்றி அரசன் யாதொரு வரியும் விதிக்கக்கூடாது என்ற முறையானது கி.பி. 14-ம் நூற்றாண்டுக்குள் அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டது. கிறிஸ்துவமத நூலாகிய 'பைபில்' என்ற கிரந்தமானது லத்தீன் பாஷையிலும் கிரேக் பாஷையிலும் வழங்கிவந்து பொதுஜனங்களால் வாசிக்கமுடியாமல் இருந்தது. விக்லிப்பும் அவரைப் பின்பற்றியவர்களும் கி. பி. 1384-ம் ஆண்டுவாக்கில் அக்கிரந்தத்தை ஆங்கிலபாஷையில் மொழிபெயர்த்தார்கள். அது முதல் இங்கிலீஷ் பாஷையும் ஒரு நவீனத்தோற்றம் பெறத்தொடங்கியது.

6 லங்காஸ்டர் யார்க் வம்ச அரசர்கள் கி! பி. 1399-1485 86 வருஷங்கள். இந்த இரண்டு வம்சங்களிலும் 6 அரசர்

கள் அரசாண்டார்கள். அவர்கள் காலத்தில் சிவப்பு ரோஜா வெள்ளைரோஜா மலர்கள் அடையாளமாகக்கொண்ட அந்த இரண்டு கூட்டத்தார்களுக்குள் கி. பி. 1450 முதல் 1455-ம் ஆண்டுவரை உள்நாட்டு போர் நடந்தது. இந்தக் காலத்தில் அதாவது கி. பி. 1474-ம்ஹூ வாக்கில் வில்லியம் காக்ஸ்டன் என்போன் இங்லீஷ் புஸ்தகங்களை முதலில் அச்சடித்தான்.

7 டேர் வம்ச அரசர்கள் கி. பி. 1485-1603, 178 வருஷங்கள். இந்த வம்சத்தை ஸ்தாபித்தவன் ஹென்றி VII என்போன். அவனுடைய மகனான ஹென்றி VIII என்பவன் ஒன்றின் பின் ஒன்றாக ஆறு ஸ்திரீகளை விவாகம் செய்துகொண்டதாகக் கியாதிபெற்றது மல்லாமல் அவர்களில் சிலரை சிரைச்சேதம் செய்தான். இவன்காலத்தில் ஐரோப்பாகண்டத்தில் லூதர் என்பவர் 'ரிபர்மேஷன்' ஒன்ற மத சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். கிறிஸ்துமதத்தில் அதுமுதல் புரோட்ஸ்டாண்டு வகுப்பார்கள் ரோமான் வகுப்பார்களை விட்டுவிலகி ரோமாபுரியிலிருக்கும் ரோமன்கதோலிக் அத்தியக்ஷகுருவாகிய போப்பின் அதிகாரத்தை மறுத்தார்கள் ஹென்றி VIII அரசன் தன்னுடைய சுயநலத்தைக்கருதி ஆங்கில மடாலயங்களையும் அவர்களுடைய சொத்துக்களையும் கவர்ந்து போப்பின் அதிகாரத்தினின்று தன்னையும் ஆங்கில மதஸ்தாபனத்தையும் விலக்கிக் கொண்டு அதைத்தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தான். அவனுடைய மகள் மேரி என்பவள் கி. பி. 1553-ம் ஆண்டிர ராணியாக அரசாண்டு ரோமன் கதாலிக் மதத்தில் தீவிர சிரத்தையுள்ளவளாய் புரோடஸ்டாண்ட் சார்பினரை இம்சித்து வந்தாள். அவளுக்குப்பின் வந்த எலிஸபெத் என்ற ராணி புரோடஸ்டாண்ட் சார்பினளாய் ரோமன்கதாலிக் மதஸ்தர்களை இம்சித்தாள். இந்த எலிஸபெத் ராணி காலத்தில்தான் முதல் முதல் அதாவது கி. பி. 1600-ம் ஆண்டில் ஈஸ்ட் இண்டியா கம்பெனி என்ற வர்த்தக கூட்டமானது ஸ்தாபிக்கப்பட்டு இந்தியா தேசத்துடன் வியாபாரம் செய்ய ஆரம்பித்தது. இவள் காலத்தை ஆங்கில சரித்திரத்தில் பெருமையான காலமாகச்சொல்லுகிறார்கள். ஷேக்ஸ்பியர் என்ற மகா நாடகக் கவி இக்காலத்தில் தோன்றினர். அமெரிக்கா தேசத்தில் பல ஆங்கிலத் தலைவர்கள் சென்று குடியேறி நாடுகளை ஸ்தாபித்தார்கள். அது வரை ஐரோப்பாக்கண்டத்திலும் அமெரிக்கா கண்டத்திலும் செழித்து ஓங்கி விளங்கிய ஸ்பெயின் தேசத்தரசனான பிலிப் II என்பவனுடைய கப்பற் படைகள் ஆங்கில தேசத்தைப் படையெடுத்ததில் தோல்வியடைந்தன. எலிஸபெத்ராணியின் காலமானது நமது தேசத்தில் மொகலாய வம்சத்தில் அக்பர் என்பவர் சிறப்பாய் அரசாண்டகாலமாகும்.

8 ஸ்டுவேர்ட் வம்ச அரசர்கள். கி. பி. 1603-1714, 111 வருஷங்சள. இந்த வம்சத்தின் முதல் அரசனுன ஜேம்ஸ் I என்போன் ஆங்கில தேசத்தின் அரசனுவதற்குமுன்பே ஸ்காட்லாண்டு தேசத்தின் அரசனுயிருந்தபடியால் இரண்டு தேசங்களும் இவன் காலத்தில் ஒரு ஆளுகைக்குள் வந்தன. இந்த அரசன் காலத்தில் இப்பொழுது வழங்கிவரும் கிறிஸ்துவ பைபில் நூலானது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இவனுடைய மகன் சார்லஸ் I என்போன் பார்லிமெண்டு சம்மதமின்றி வரிகள் வசூலித்து வந்ததற்காக பார்லிமெண்டு சபையார் இவனை எதிர்த்தார்கள். இருதரத்தாருக்கும் நடந்த யுத்தத்தில் அரசன் தோல்வியுற்று பார்லிமெண்டு கக்ஷியால் கைதிசெய்யப்பட்டான். இவன் பார்லிமெண்டு சபையில் ஏற்படுத்தப்பட்ட ஓர் ஹைகோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு, தேசத்துரோகம், கொலை என்ற குற்றங்கள் செய்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவனை கி. பி. 1649-ம் ஆண்டில் சிரச்சேதம் செய்தார்கள். அதின்பிறகு ஓர் குடியரசு நாடு ஏற்படுத்தப்பட்டு அதற்கு பார்லிமெண்டு கக்ஷியின் தலைவனுன ஒலிவர்கிராம்வெல் என்போன் அதிபதியாய் கி.பி. 1658ம் ஆண்டுவரை அரசாங்கத்தை நடத்தினன். கி. பி. 1660ம் வருஷத்தில் சாரலஸ் I. மகனுன சாரலஸ் II அரசனுன ஸ்டுவேர்ட் வம்சத்தார் காலத்தில் ஆங்கிலேயர்கள் உலகத்தில் முதன்மையானகுடி யேறும் ஜாதியாராகவும் வர்த்தகர்களாகவும் ஆயினர். இந்த காலத்தில் நவீன ஆங்கிலபாஷையானது வாசக நடைக்கு உரியதாகச்செய்யப்பட்டது. கி. பி. 1665-ம் வருஷத்தில் லண்டன் நகரமானது பிளேக் வியாதியால் பீடிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்காய் ஜனங்கள் மாண்டார்கள். கி பி 1666-ம் வருஷத்தில் அதில் பாதி பாகம் ஒருபெரிய அக்னி உபாதியால் அழிக்கப்பட்டது. ஜேம்ஸ் IIன் மருமகன் வில்லியம் IIIயும் மகள் மேரியும் கி. பி. 1689-ம் ஆண்டில் ராசன் ராணியுமாகச் செய்யப்பட்டார்கள். அந்த வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பாத்தியஸ்தாபன சட்டத்தில் அரசரின் அதிகாரமானது இன்னும் வரம்புக் குள்படுத்தப்பட்டது. அரசன் பார்லிமெண்டின் சம்மதமின்றி வரி விதிக்கப்படாதென்றும் சேனையை வைத்துக்கொள்ளக்கூடாதென்றும் பிரஜைகளுக்கு அரசனிடம் மனுக்கொடுத்துக்கொள்ள பாத்தியம் உண்டென்றும் பார்லிமெண்டில் மெம்பர்கள் அவர்கள் அபிப்பிராயங்கள் தங்குதடையின்றி எடுத்துக்கூறலாமென்றும் இங்கிலீஷ் அரசர் ரோமன் கதாலிக் மதத்தை அனுஷ்டிக்கவாவது அம்மதஸ்தரை விவாகம் செய்துகொள்ளவாவது கூடாதென்றும் அச்சட்டத்தால் ஏற்பட்டது.

9. ஹானேவர் வம்ச அரசர்கள் (கி. பி. 1714—1837) 123 வருஷங்கள். இந்த வம்சத்தில் ஐந்து அரசர்கள் ஆண்

டார்கள். அவர்களில் ஜார்ஜ் III மன்னர் காலத்தில் இங்கிலாந்தின் ஆளுகையிலிருந்து அமெரிக்கா கண்டத்தின் ஐக்கிய மாகாணத்தார் தங்கள் சுயேற்சையை நாடி யுத்தஞ்செய்து பிரிந்தார்கள். ஐக்கியநாட்டின் சுயேற்சையானது கி.பி. 1776ம் வருஷத்தில் விளம்பரப்படுத்தப்பட்டது. இந்தியாவில் கவர்னர் ஜனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் இந்தியர்களை ஹிம்சைப்படுத்தி அநீதியாய் ஆளுகை செலுத்தினரென்று பார்லிமெண்டு சபையில் அவர்பேரில் குற்றஞ் சாட்டப்பட்டது. அவருடைய விசாரணையானது கி.பி. 1788ம் ஆண்டில் ஆரம்பித்து சில வருஷங்களாக நடைபெற்று கடைசியில் விடுதலை செய்யப்பட்டார். பிரான்ஸ்தேசத்தில் 1789ம் வருஷத்தில் ஒரு பெரிய கலாபம் நிகழ்ந்தது. அதின் முடிவில் ஓர் பேர் போன தளகர்த்தனை நெப்போலியன் போனபார்ட் என்பவன் பிரான்ஸ் தேசத்தில் ஆதிக்யம் பெற்று கடைசியில் சக்கிரவர்த்தியாயினன். பிரஞ்சு தேசத்திற்கும் இங்கிலாந்து உள்பட மற்ற சில ஐரோப்பிய தேசங்களுக்கும் கொடும்போர் நிகழ்ந்தது. கடைசியில் நெப்போலியன் வாட்டர்லூ சண்டையில் 1815-ம் வருஷத்தில் தோல்வியடைந்து சிறைப்படுத்தப்பட்டு ஸெண்ட் ஹெலீனுதிவுக்கு அனுப்பப்பட்டு அங்கே 1822ம் வருஷத்தில் மரணமடைந்தான். கி. பி. 1832ம் வருஷத்தில் இங்கிலாந்தில் ஓர்சிறந்த ராஜகீய சீர்திருத்தம் ஏற்பட்டது. அதன் மூலமாய் முன் வோட்டில்லாத ஜனங்களுக்கு வோட்டுகள் கிடைத்து "ஹவுஸ் ஆவ் காமென்ஸ்" சபைக்கு மெம்பர்களாகத் தெரிந்தெடுப்பதற்கு, ஸ்தானங்களையும் வோட்டர்களையும் விசாலப்படுத்துவதற்கும், ஜன உரிமைகளை பலப்படுத்துவதற்கும், ஓர் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

**10. வின்ஸர் வம்ச அரசர்கள் 1837**—இதின் முதல் அரசர் மகாராணி விக்டோரியா. அவர் 1837ம் வருஷமுதல் 1901ம் வருஷம் வரை அரசு செலுத்தினர். அவருடைய காலத்தில் இங்கிலாந்து தேசமானது கீர்த்தியிலும் செல்வாக்கிலும் முன்னேற்றம்பெற்று அந்த காலத்தை புகழ்பெற்ற காலமென்று கொண்டாடுகிறார்கள். 1854ம் வருஷமுதல் 1856ம் வருஷம்வரை இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் ஒரு யுத்தம் நடந்து பிறகு சமாதானமாய் முடிந்தது. இந்தியாவில் 1857ம் வருஷத்தில் சிப்பாய்க் கலகம் என்ற ஒரு பெரிய கலகம் உண்டாகி இந்தியாவின் ஆளுகையானது ஈஸ்ட்டு இந்தியா கம்பெனியாரிடமிருந்து இங்கிலீஷ் அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டது. மகாராணி விக்டோரியாவிற்குப் பிறகு அவர் குமாரரான எட்வர்ட் VII அரசன் ஆனர். அவர் 1910ம் வருஷத்தில் மரணமடைந்தார். அவருக்குப்பின் அவருடைய குமாரரான ஜார்ஜ் V அரசாக அரசுசெலுத்தி வருகிறார். இவர்

காலத்தில் 1914ம் வருஷமுதல் 1918ம் வருஷம்வரை இங்கிலாந்து பிரான்ஸ் முதலான தேசங்கள் ஒரு தரப்பாகவும், ஜெர்மனி முதலிய தேசங்கள் மற்றொரு தரப்பாகவும் இருந்து ஒரு கோரமான மகா யுத்தம் நிகழ்ந்தது. அந்த யுத்தத்தில் ஜெர்மானியர் தோல்வி யடைந்தார்கள். அந்த யுத்தமானது தரையிலும், சமுத்திரத்தின்மேலும், சமுத்திரத் தண்ணீருக்குள்ளும் ஆகாசத்திலும் நடைபெற்றது. அதற்காகக் கடலில் முழுகிக் கிளம்பும் கப்பல்களும், ஆகாய விமானங்களும் உபயோகப்பட்டுவந்தன. அந்த யுத்தத்தின் முடிவில் ருஷியா ஆஸ்திரியா ஜெர்மனி துருக்கி முதலிய தேசங்களில் ஆண்டு வந்த அரசர்கள் அவருடைய ஸ்தானங்களிலிருந்து விலக்கப் பட்டனர். அந்த தேசங்கள் குடியரசு நாடுகள் ஆயின. இங்கிலாந்தின் ராஜவம்சமட்டும் யாதொரு சலனமின்றி அதின் ஸ்தானத்தில் நிலைபெற்று இருந்துவருகிறது.

## 11. அரசாக்ஷி.

இங்கிலாந்து தேச அரசாக்ஷி "எல்லைக்குட்பட்ட ஏகாதிபத்திய அரசாக்ஷி" எனப்படும். அரசர்வம்ச பரம்பரையில் வருவர். இளவரசுக்கு, பிரின்ஸ் ஆப் வேல்சு என்று பட்டம்.

அரசருக்குக்கீழ் இரண்டு சட்டசபைகள் இருக்கின்றன; ஒன்று ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை; இதற்கு "ஹவுஸ் ஆப் காமன்ஸ்" என்று பெயர். மற்றது பிரபுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை; இதற்கு "ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்" என்று பெயர். இவ்விரண்டும் கூடி பார்லிமெண்ட் எனப்படும். இந்த இரண்டு சபை அங்கத்தினர்களிலிருநதும் செல்வாக்குடைய சில பேர்கள் ஒற்றுமையாகி அரசாக்ஷியை நடத்துவார்கள். இச்சிலபேர்சேர்நத அந்தரங்க சபைக்கு "காபினட்" என்று பெயர். இவர்கள்தான் சகல காரியங்களையும் உண்மையில் முடிவு செய்பவர்கள். இதற்குத் தலைவராக இருக்கப்பட்டவர்தான், பிரதமமந்திரி, "பிரைம் மினிஸ்டர்" என்று சொல்லப்படுவார். இந்த அந்தரங்க சபையில் இந்திய மந்திரி ஒருவர். அவருக்கு உட்பட்டுதான், இராஜப்பிரதிநிதியும், சென்னை முதல் மற்ற கவர்னர்களும் இந்தியாவில் சட்டப்படி அரசாக்ஷி செய்யவேண்டியது. அவ்விதமே மற்றப் பிரதேசங்களுக்கும் மந்திரிகள் உண்டு.

ஒரு சட்டம் புதிதாக ஏற்படவேண்டுமானால், அது முதலில் "ஹவுஸ் ஆப் காமன்ஸ்" சபையில் கொண்டுவரப் பட்டு, அங்கே அங்கீகாரமானபின், "ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்"ல் அங்கீகாரமாகவேண்டும். அப்போது இராஜசம்மதம் அளிக்கப் படும். பிறகு அமுலுக்குவரும். பண சம்மந்தமான எந்த சட்டத்தையும் "ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்" 1 மாதத்திற்குமேல் தடை செய்யமுடியாது. அந்தகாலத்திற்குள் பிரபுக்கள் அதைத்

திருத்தி ஒப்புக்கொள்ளாவிட்டால் அரசருடைய அனுமதியில் அது அமுலுக்கு வந்துவிடும்.

"ஹவுஸ் ஆப் காமன்சு"க்குத்தலைவர் அங்கத்தினர்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவருக்கு "ஸ்பீகர்"என்று பெயர். இராஜ்ஜியத்தில் உயிர்வாழும் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் இச்சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க ஓட்டுரிமை உண்டு. இப்போது இச்சபையில் மொத்த அங்கத்தினர் 615--492 இங்கிலாந்து, 36 வேல்ஸ், 74 ஸ்காட்லெண்ட், 13 வட அயர்லாந்துலிருந்தும், தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களில் 307, அதாவது சரிபாதி கிராமங்களி (ஊர்கள்) லிருந்து எடுக்கப்படுவது கவனிக்கத்தக்கது. பிரபுக்கள் எல்லாரும், பெரிய பாதிரிமார்கள் உள்பட, ஹவுஸ் ஆப் லார்ட்சுக்கு அங்கத்தினர்களாவார்கள். அச்சபைக்குத் தலைவர் பிரதம மந்திரிக்கு அடுத்தபடியில் உள்ளவர். அவருக்கு "லார்ட் சேன்சலர்" என்றபட்டம்.

## 12. முடிவுரை.

இந்தியதேச சரித்திரத்தை இங்கிலாந்துதேச சரித்திரத்துடன் ஒத்துப் பார்த்திடில், சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இந்தியாவானது அநேகமாயிரம் வருஷங்களாக நாகரீகத்துடன் கூடியதாயுள்ளது. இங்கிலாந்தின் நாகரீகமானது சுமார் 1500 வருஷகாலமே நீடித்துள்ளது. நம்முடைய தேசம் இங்கிலாந்து தேசத்தைக்காட்டிலும் அநேக மடங்கு விசாலமாயுள்ளது. இங்கிலாந்துதேச சரித்திரமோ பெரும்பாலும் அந்த 1500 வருஷ காலத்தில் ஒரே தொடர்ச்சியுடன் அபிவிர்த்தியடைந்த ராஜீய அமைப்புள்ளது. நம்முடைய சரித்திரத்திலோ பற்பல மாறுதல்களுடன் சென்ற 1500 வருஷங்களாக தொடர்ச்சியின்மையானது காணப்படுகிறது. அந்த தேசத்திலோ இப்பொழுது ஆங்கிலம் ஒரே ஒரு பாஷையாகப் பேசி, ஒரே ஒரு ஜாதியாராக இருக்கின்றனர். நம்முடைய தேசத்திலோ பல பாஷைகள்பேசும் பல ஜாதியார்கள் வசிக்கின்றனர். ஆங்கிலேயர்கள் கைத்தொழில்களிலும் வியாபாரத்திலும்ஆளுகையிலும் லௌகிக சாஸ்திரங்களிலும் தேர்ச்சி யடைந்திருக்கிறார்கள். இந்தியர்கள் பொதுவாக அந்தர்முகப்பட்டவர்களாய் தத்துவ சாஸ்திர விசாரணையிலும் மத விஷயங்களிலும் பற்றுதல் உள்ளவர்களாய் பகிர்முக பிரவிர்த்திகளை அதிக உற்சாகத்துடன் நடத்துகிறதில்லை. ஆகையால் இவ்விருதரத்தாரும் ஒருவரிடமிருந்து மற்றொருவர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள்ளன.

---

பாரதி பிரஸ், மன்னார்குடி.

இறைவன் துணை.

## கௌமார குருகுலம்—மன்னார்குடி.

மன்னார்குடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கௌமாரகுருகுலம், மன்னார்குடியைச் சுற்றி 12 மயில் தூரத்திற்குள்ள கிராமவாசிகளின் கல்வி நலத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுப்பிரயாணப் புத்தகசாலைத் தொண்டினால் இங்கிருந்து 95 கிராமக்கிளைகளுக்கு இனமாகப் படிக்கப் புத்தகங்கள் கொடுத்து வாங்கப்படுகின்றன. சித்திரை ஐப்பசி மாதங்களில் கிராம வாலிபர்களுக்கு பிரத்தியேகப் பள்ளிக்கூடம் வைக்கப்பட்டு உயர்தரக் கல்வி போதிக்கப்படுகிறது. வேண்டிய விபரம் காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்க.

# முதியோர் கிராமக் கல்வி நூல்.

கிராமத்தில் உள்ளவர்கள் முன்னேற்றம் அடைந்தாலல்லது நமது நாடு முன்னேற்றமடையாது என்பது யாவரும் ஒப்புக்கொண்டது. பழைய முறைகள் மாறி புதிய முறைகள் தலை எடுக்கும் இக்காலத்தில் சகல துறைகளிலும் வாழ்க்கை நலம் அடையத்தக்க அறிவு ஒரு அளவு கிராமவாசிகள் யாவருக்கும் அவசியம். வாழ்க்கைத் துறைகள் எனப்படும்,

1. சமயமும் ஒழுக்கமும்
2. சுகாதாரம்
3. கிராமப் பொருள் நிலை
4. தமிழ் மொழி
5. தேசசரித்திரம் பூகோளம்
6. தேசபரிபாலனம்

7. பூதபௌதிக அறிவு.

முதலிய விஷயங்களைப்பற்றி கிராமங்களிலிருந்து முதியோர் 45 பேர்களைக் கூட்டி பல பெரியார்களைக் கொண்டு மன்னார்குடி கௌமாரகுருகுலத்தில் இவ்வாண்டு சித்திரை மாதத்தில் 70 உபந்நியாசங்கள் நடத்தப்பட்டன. அவைகள் எல்லாம் அச்சிடப்பட்டு, 4 புத்தகங்களாக கட்டப்பட்டுள்ளன. இக் **நான்கு புத்தங்களும் சேர்ந்து 712 பக்கங்களும் 53 படங்களும் உடையன.** விலை ரூ 2—8—0

**இப் புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் தினசரி உபயோகப் படத்தக்கது.**

**ஆசிரியர்கள்,** திருவாளர்கள்.

டாக்டர், மகாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர், எல், எல், டி
எஸ். முத்தைய முதலியார் பி. எ. பி. எல், (முன் மந்திரி)
கெ. வி. சேஷய்யங்கார் எம். எ. பி. எல்.
கெ. எஸ். ஸ்ரீனிவாசாரியார் எம் எ. பி. எல்,
ரெவரன்ட் என். ஜி. பொன்னையா பி. எ. எல். டி.
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி. எ. பி. எல்.
எம். பாலசுப்பிரமணிய முதலியார் பி. எ. பி. எல்.
டீ. கந்தசாமிப் பிள்ளை, எம். ஆர். எ. எஸ்.
காப்டன். டி. கே. நாராயணராவ் எம். பி. பி. எஸ்.
பி. வி. முத்துக்கிருஷ்ண ஐயர் எல். எம். பி.
எ. சொக்கலிங்கம். எல். எம். பி.
எஸ். சிவசுப்பிரமணிய ஐயர்.
சீ. மீ. முகம்மதுயூசுப் பாவலர்.
இராவ்சாகிபு எ. சேதுராமய்யர்.
இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை முதலியோர்கள்.

1. **சம்யமும் ஒழுக்கமும்:** இதில் சைவம், வைஷ்ணவம், கிறிஸ்து சமயம், இஸ்லாம் மதங்களின் உண்மைகளும் அவர்கள் பிரார்த்தனைகளும், ஆன்மவளர்ச்சி, ஸ்தூல சூக்ஷம தேகங்கள், மதியும் விதியும், சூரிய நமஸ்காரம் தற்காலத்திற்கு அவசியமான ஒழுக்கங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

2 **சுகாதாரம்:** நோய்களும் சிகிச்சைகளும் இங்கிலீஷ் தமிழ் வைத்திய முறைகளின்படி சொல்லப்பட்டிருக்கிறது;. உடல் நூல், சுத்தவாழ்வு, உணவு, மரணம், உடற் பயிற்சி, பிள்ளைப் பேறு, பிள்ளை வளர்ச்சி, கிராம சுகாதார வேலை அடங்கியது. கிராமத்திலேயே வீடுகளில் அவசியம் போல் செய்து கொள்ள கைமருந்துகள் கூறப்பட்டுள்ளன.

3 **கிராமப்பொருள் நிலை:** விவசாயம், ஆடு மாடு கோழி வளர்த்தல், குடும்பக் கைத்தொழில், குடும்பவாழ்க்கை, குடும்ப சிக்கனம், குடும்ப கணக்கு, நில அளவு.

4. **தமிழ்மொழி.** கிராமக்கல்வி, தமிழின் பெருமை, தமிழ் இலக்கியப் பகுதிகள், கம்பராமாயணம், பிரபந்த ஆராய்ச்சி, புத்தகசாலைகள், பெண் கல்வி,

5. **தேசசரித்திரம், பூகோளம்:** பண்டைத் தமிழர், தமிழ் நாட்டு சரித்திரம், முற்காலத்தில் கிராம பரிபாலனம், இந்தியா தேசசரித்திரம், இங்கிலாந்து தேசசரித்திரம், கிராம பூகோளம், தமிழ்நாட்டு பூகோளம், இந்திய பூகோளம், உலக பூகோளம்,—படங்களுடன்.

6. **தேசபரிபாலனம்:** சர்க்கார் விசாரணை, டென்மார்க்தேச பொதுஜன உயர்தரப் பாடசாலை, கூட்டுழைப்பின் டென்மார்க் தேச இயக்கம், கூட்டுறவும் கிராம முன்னேற்றமும், தாலூக்காபோர்ட், யூனியன், பஞ்சாயத்துகள், வோட்டின் உத்திரவாதம், ஐக்கிய முறை, நாணயசங்கங்கள்.

7. **பூதபௌதிக அறிவு:** தாவரம், ஜீவராசிகள், விகாச முறை, தினசரிவாழ்வில் பூதபௌதிக அறிவு, பௌதிக சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், பஞ்சாங்கம், வானசாஸ்திரம், நக்ஷத்திர படங்கள், சீதோஷ்ணம், மழை காற்று படங்களுடன்.

இவையன்றி இப் புத்தகத்தில் கௌமாரகுருகுலத்தைப் பற்றிய பூரா விபரமும் படங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

---

**விவசாயம்:** 24 பக்கங்களுடையது, பயிர் செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. பழி மொழி, குறள்களுடன் தற்காலத்தில் கண்டறியபட்ட புதிய விஷயங்கள் அனுபவத்தில் வேண்டியவை அடங்கியது. விலை அணு 4.

**தினசரி ஹிந்து பிரார்த்தனைகள், சர்வசமயப்பிரார்த்தனைகள்.** இது சைவ, வைணவ, கிறிஸ்து, முஸ்லீம் யாவருக்கும் பயன்படும். அவ்வச் சமய நூல்களினின்றும் எடுத்து தொகுக்கப்பட்டது. 20 பக்கங்கள் அடங்கியது. விலை அணு 4.

**முதியோர் கல்வி முறை:** 42 பக்கங்கள் அடங்கியது. கௌமார குருகுலத்தைப்பற்றிய முழு விபரமும் படங்களும் அடங்கியது. விலை அணு 3.

**உடற்பயிற்சி படம்:** ஆண் பெண் ஒவ்வொருவரும் இயற்கையாகச் செய்யக்கூடியது. உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் நலம் தரும் பயிற்சிகள். விலை அணு 1.

**Ideals & Service of Koumaragurukulam.** Gives full details of this Adult Education centre including Travelling Library Service Pages 36 with pictures. Price as 6.